MISSION PRESS 1840

# சர்வவியாபி

SARVAVIABI

| 02-04-2017 | சமய வளர்ச்சி சமுதாய மறுமலர்ச்சி | 1 | துர்முகி வருடம் பங்குனி 20 | வருட சந்தா ₹ 150 தனிப்பிரதி ₹ 6 |
|---|---|---|---|---|

| புத்தகம் 111 பக்கம் - 12 | இதழ் 13 | e-mail:missionpress48@gmail.com e-mail:missionpress48@yahoo.com | Ph: 0413/ 2334360 | ஆசிரியர்: அருள்தந்தை C. அந்தோனி ரோச் |
|---|---|---|---|---|


## மிலான் நகர திருப்பலியில் திருத்தந்தையின் மறையுரை



அன்பு சகோதர, சகோதரிகளே,

**வ**ரலாற்றின் மிக முக்கியமான அறிவிப்பை இப்போது கேட்டோம் (காண்க. லூக்கா 1:26-28). திருமுழுக்கு யோவான் பிறப்பைக் குறித்து வழங்கப்பட்ட செய்தியின் (காண்க லூக்கா.1:5-20) வெளிச்சத்தில் பொருள் செறிந்த இப்பகுதியைச் சிந்தித்துப் பார்க்க விழைகிறேன்.

மக்கள் அனைவரும் வெளியில் காத்துக்கொண்டிருந்த வேளையில், குரு செக்கரியா இறைவன் சன்னதியில் பணியாற்றியபோது, திருமுழுக்கு யோவானின் பிறப்பு குறித்த செய்தி வழங்கப்பட்டது. இயேசுவின் பிறப்பு குறித்த செய்தியோ, அதிகம் அறியப்படாத ஒரு கிராமத்தில், ஒரு வீட்டில், மரியா என்ற இளம் பெண்ணுக்கு வழங்கப்பட்டது.

இறைவன் வந்து தங்க விழையும் ஆலயங்கள், நாம் எதிர்பாராத இடங்களில் இருக்கும் என்பதை இந்நிகழ்வு காட்டுகிறது. எந்த ஒரு மனிதச் சூழலும் இறைவன் வந்து தங்குவதற்குப் புறம்பான சூழல் இல்லை.

மரியாவின் இல்லம் தேடி வந்த இறைவன், நம் ஒவ்வொருவர் இல்லத்தையும், நம் சாதாரண வாழ்வையும் தேடி வருகிறார். நமது இல்லங்களில், நாம் பணியாற்றும் இடங்களில், நமது நகரங்களில் "மகிழுங்கள், ஆண்டவர் உங்களோடு இருக்கிறார்" என்ற நற்செய்தி ஒலிக்கிறது.

"இது எப்படி நிகழும்?" என்று மரியா கலங்கி நின்றதைப் போல, நாமும் நமது சூழல்களை எண்ணி புரியாமல் நிற்கிறோம். வறியோர், புலம்பெயர்ந்தோர், வேலையற்ற இளையோர் என்ற பல பிரச்சனைகளை எண்ணி நாமும் கலங்கி நிற்கிறோம், நம்பிக்கை இழக்கிறோம். நம்மைச்சுற்றி மிகத் துரித வேகத்தில் நடைபெறும் நிகழ்வுகள், நமது நம்பிக்கையையும், மகிழ்வையும் களவாடிச் செல்கின்றன. இந்த வேகத்தால், நமது வாழ்வு முன்னேறும் என்ற கருத்து சொல்லப்பட்டாலும், நமது குடும்பம், நண்பர்கள், நாம் வாழும் சமுதாயம் ஆகியவற்றிற்கு நேரம் ஒதுக்க முடியாமல் தவிக்கிறோம். நற்செய்தியின் மகிழ்வை இன்று நமது நகரங்களில் எவ்விதம் வாழ்வது? இன்றையச் சூழலில் கிறிஸ்தவ நம்பிக்கையை எவ்விதம் கொண்டிருப்பது? இவ்விரு கேள்விகளும், நம்மையும், நமது குழந்தைகளையும் உள்ளடக்கியுள்ளன. குழம்பி நின்ற மரியாவுக்கு வானதூதர் அளித்த பதிலில், நாம் மூன்று கருத்துக்களை உணரலாம்.

**1. வரலாற்று நினைவை வரவழைத்தல்:** மீட்பின் வரலாற்றில் மரியா ஒரு பகுதி என்பதை வானதூதர் உணர்த்தினார். உடன்படிக்கையின் மகள் அவர் என்பதை புரிந்து கொள்ளச் செய்தார். நாமும், வரலாற்றினால் உருவாக்கப்பட்டவர்கள். இரு உலகப் போர்களின் வேதனைகளை உணர்ந்த ஒரு நாட்டில் நாம் வாழ்கிறோம். கடினமான உழைப்பால் மீண்டும் கட்டியெழுப்பப்பட்ட வரலாற்றில் வாழ்கிறோம். எனவே, அனைத்தும் எளிதாகக் கிடைக்கும் என்ற மந்திர, தந்திரத்தை நம்பாமல் இருக்க, நமது வரலாற்று நினைவு உதவி செய்யும்.

**2. கடவுளின் மக்கள் என்ற உண்மையில் பங்கேற்றல்:** மரியாவுக்கு உணர்த்தப்பட்ட வரலாற்று நினைவு, அவர் கடவுளின் மக்கள் என்ற குழுமத்தில் ஒருவர் என்பதையும் புரிந்துகொள்ள உதவியது. பல வேறுபாடுகளைக் கொண்ட சமுதாயத்தில் நாம் வாழ்ந்தாலும், அனைவரும் கடவுளின் மக்கள் என்ற உணர்வே, நம் அனைவரையும் ஒருங்கிணைக்க முடியும்.

**3. முடியாதது, முடியும் என்ற உணர்வு:** "கடவுளால் இயலாதது ஒன்றுமில்லை" (லூக்கா 1:37) என்ற வார்த்தைகளை, வானதூதர் மரியாவுக்கு வழங்குகிறார். நம்மை மட்டுமே சார்ந்து நாம் வாழும்போது, நமது சக்திகளுக்குள் நாம் சிறைப்பட்டு விடுகிறோம். இறைவனின் அருளுக்காக நம்மை திறந்து வைக்கும்போது, முடியாதது என்பனவும் முடிகின்றது. நமது சக்திகளை நம்பி, நம்பிக்கையின்மையால் சிறைப்படுவதற்குப் பதில், கடவுளின் அருளில் நம்பிக்கைக் கொண்டு, முடியாததென தெரிவன வற்றையும் முடிப்போம். புனித அம்புரோஸ், இந்த நற்செய்திப் பகுதிக்கு அளித்த விளக்கத்தில், "மிகக் கடினமானச் சூழல்களிலும், நம்பிக்கை கொண்ட மரியாவைப் போன்ற உள்ளத்தை கடவுள் தொடர்ந்து தேடுகிறார்" என்று கூறியுள்ளார். அவ்வகை உள்ளத்தையும், நம்பிக்கையையும் இறைவன் நமக்கு வழங்குவாராக! ●

## மிலான் நகர வரவேற்பு நிகழ்வில் திருத்தந்தை வழங்கிய உரை

**அ**ன்பு சகோதர, சகோதரிகளே, காலை வணக்கம்!

நீங்கள் வழங்கிய வரவேற்பிற்கு மிக்க நன்றி. எனக்களித்த இரு சிறப்பான பரிசுகளுக்கு தனிப்பட்ட முறையில் நன்றி கூறுகிறேன். நீங்கள் அளித்த முதல் பரிசு, அருள்பணியாளர்கள் திருப்பலியில் அணியும் கழுத்துப்பட்டை. இதன் வழியே, நான் இந்த நகருக்கு ஒரு அருள்பணியாளராக வந்திருப்பதை இந்தப் பரிசு குறிக்கிறது. என்னை உங்கள் பங்குத்தந்தை போல வரவேற்றுள்ளீர்கள். மேலும், இந்த கழுத்துப்பட்டை இதே நகரில் பாரம்பரிய முறையில் உருவாக்கப்பட்டுள்ளது என்பது, இதனை இன்னும் சிறப்பான ஒரு பரிசாக மாற்றுகிறது.

நீங்கள் எனக்களித்த இரண்டாவது பரிசு, அன்னையின் திரு உருவம். இந்நகருக்குள் நான் நுழைந்ததும், நீங்கள் இந்த பரிசை வழங்கியிருப்பதன் வழியே, அன்னை மரியாவே என்னை வரவேற்பதைப்போல் உணர்கிறேன். தன் உறவினரான எலிசபெத்தை மரியா தேடிச் சென்றதைப்போல, என்னையும் தேடி வந்துள்ளார் என்பதை உணர்கிறேன். மிலான் பேராலயத்தில் மேலுள்ள அன்னை மரியாவின் உருவம் புதுப்பிக்கப்பட்டதை இந்த பரிசு உணர்த்துகிறது. அன்னை மரியாவின் உருவம் புதுப்பிக்கப்பட்டதைப்போல, இறைவனின் சாயலில் உருவாக்கப்பட்டுள்ள நம் ஒவ்வொருவரையும் இறைவன் புதுப்பிப்பாராக!

நீங்கள் வழங்கிய இவ்விரு பரிசுகளுக்கும் மீண்டும் ஒருமுறை நன்றி. உங்கள் அனைவரையும் இறைவன் ஆசீர்வதிப்பாராக! ●

ஆசிரியர் பேனா...

# அகவாழ்வு திடம் பெற மதிப்பீடுகள் அவசியம்

**(“இறைவன் வழங்கும் புதிய மதிப்பீடுகளின் உதவியுடன் நாம் ஒவ்வொருவரும் மற்றவர்களைக் கனிக்க முன்வர வேண்டுமேயொழிய, முற்சார்பு எண்ணங்களுடன் அல்ல” - திருத்தந்தை பிரான்சிஸ், 26-3-2017 ஞாயிறு மறையுரை)**

**இன்று நாம் காண்பது:** நம்மைச் சுற்றி தினம் தினம் குழப்பங்களும், சிக்கல்களும், சீரழிவுகளும் இடம் பெறுவதைக் காண முடிகிறது. மனித, ஆன்மீக, இறை மதிப்பீடுகள் காற்றில் விடப்படுவதைப் பார்க்கிறோம். நன்னெறி, ஒழுக்க, ஆன்மீக வளங்கள் குன்றிப் போவதையும், இதனால் உருவாகும் மனஉளைச்சல்கள், பெயர் நஷ்டம்,பொருள் நட்டம் ஆகியவற்றை நம்மால் தடுக்கவோ குறைக்கவோ இயலாமல் நாம் திணறிப் போகும் சூழல்களையும் சந்திக்கிறோம். சமூக, குழும வரலாற்றில் இத்தகைய அனுபவங்கள் புதிது அல்ல என்றாலும், இன்றுவரை வளர்ந்து வரும் மனித இனத்தின் மீது இவற்றின் தாக்கங்களும், இத்தாக்கங்களின் அதிவிரைவு பரவுதல்களும் எண்ணிப் பார்க்க இயலாதவையாக இருக்கின்றன. கையடக்க அலைபேசி (செல்போன்) களால் எவ்வளவோ நன்மைகள் உண்டு என்றாலும், வஞ்சக நெஞ்சுடை கரங்களில் தவழும் அலைபேசிகள் அலைகடலையும் கடந்து உலகின் கடைகோடி எல்லைவரை பலவிதமான பரப்புரைகள், பசப்புரைகள், பழிச்சொற்களை விதைப்பதை அனுபவித்திருக்கிறோம். காற்றுக்கு எல்லையிட்டு எவராலும் அதனை வளைத்து வைக்க முடிவதில்லை. அதைப்போலவேதான் இத்தகைய மதிப்பீடுகளை மறந்து இயக்கப்படும் தீவினைகளும் உள்ளன.

**இயேசுவின் உயர்நிலை மதிப்பீடுகள்:** அனைத்து மதங்களும் சொல்வது மனிதாபிமான, ஆன்மீக, பொதுநலக் கூறுகளே. இவை தரும் மதிப்பீடுகளும், நன்னெறி போதனைகளும், சமூகத்தையும் தனி மனிதனையும் வளைத்து இதமானபாதையில் செலுத்த வேண்டும். இத்தகைய பாதையில் பயணிக்கத் தவறிய தம் காலத்து இளைஞர்களின் ஒழுக்கமற்ற வாழ்வையும், நெறி பிறழ்ந்த பயணத்தையும் வன்மையாகச் சுட்டிக்காட்டினார் கிரேக்க தத்துவ ஞானி சாக்ரட்டீஸ். சட்டத்தை மட்டுமே வலுவாகப் பற்றிக் கொண்டு, சட்டம் தரும் உள் அர்த்தங்களையும் அது தரவேண்டிய வளமான விளைவுகளையும் பார்க்கத் தவறினர் இயேசுவின் காலத்து மதத் தலைவர்களும், சட்டக் காப்பாளர்களும். “உன்னை நேசிப்பதுபோல் அடுத்தவனையும் நேசி” என்றும் “தன் நண்பர்களுக்காக உயிரைக் கொடுப்பதைவிட மேலான அன்பு வேறு இல்லை” என்றும் வலியுறுத்திய இயேசு அன்பிற்காகவே, மனித இனத்தின் மேல் தாம் கொண்டிருந்த மாறாத அன்பிற்காகவே தன்னையே சிலுவை மரத்து கொலைச் சாவுக்கு கையளித்து அன்பின் தியாகச் சின்னம் ஆனார்.இதற்கெல்லாம் அடிப்படை காரணம் அவர் கொண்டிருந்தஅசைக்க முடியாத அகவாழ்வின் வலிமைதான், அகவாழ்வின் உயர்நிலை மதிப்பீடுகள்தான்.

**மதிப்பீடுகளை மங்கச் செய்வது சுயநலமே:** சமூகத்தில் காணும் சமூக, மனித, இறை மதிப்பீடுகளின் இழப்பு (அ) குறைவை நிவர்த்திக்க பல அமர்வுகள், கலந்துரையாடல்கள், திட்ட வரைவுகள், திட்ட செயலாக்கங்களை மேற்கொள்ள இயலும். ஆனால் இவற்றின் தாக்கங்கள் இச்செயல் பாடுகளின் அதிர்வு வலிமைக்கேற்ப சில நாட்கள், சில வாரங்கள் (அ) சில மாதங்கள் நீடிக்கலாம். ஆனால் அவை நிரந்தமாக்கப்படுவது தனிமனித, குழும ஈடுபாட்டைப் பொருத்தே அமையும்.

ஒவ்வொரு மனிதனும் கொண்டிருக்கும் மதிப்பீட்டின் தன்மை, அவர் கொண்டிருக்கும் இலக்கைப் பொருத்தே அமைகிறது. இந்த இலக்கு தனது பொருளாதார மற்றும் உலகு சார் ஆதாயமே, அதன் வளமே என்று முடிவானால் ஆன்மீக மற்றும் மறுஉலகுசார் கூறுகள் மங்கடிக்கப் படுகின்றன; மதிப்பீட்டின் தன்மையே நீர்த்துப் போகின்றன. இதனால் அளவுகடந்த பேராசை, பொருளாசைக்கு அழுத்தம் தரப்பட்டு பந்தம், பாசம், உறவு, நன்னெறி, ஒழுக்கம், நேர்மை, வாய்மை, ஆன்மீகம், நட்பு, ஒற்றுமை, சமூக-பொதுநலன் அனைத்துமே ஓரங்கட்டப்படுகின்றன.

**சர்வாதிகார சாயல்:** ஒவ்வொரு மனிதனும் தன் அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்துகொள்ள வேண்டிய பொருளாதாரம், புகழ், வசதி ஆகியவற்றைத் தேடிக் கொள்வதில் தவறில்லை என்றாலும் அது ஒன்றையே குறிக்கோளாக்கி எல்லை கடந்து செல்வது மனித இனத்திற்கே எதிரானது. தற்புகழ்ச்சி, தற்பெருமை, ஆள்பலம், பணபலம், அதிகாரம் இவற்றினால் கவரப்பட்ட மனிதன் எத்தனை உயரத்தில் அமர்ந்திருந்தாலும் அவன் எளியவனே. இந்த நிலை தவறானது, மதிப்பீடுகளுக்கு எதிரானது, சமூக நலனை சீரழிக்க வல்லது என்று உணராதவரை அந்த மனிதனின் செயல்பாடுகளில் சர்வாதிகாரத்தின் சாயல்தான் வெளிப்படும். இது ஆட்சி படிநிலையின் உச்சியிலிருப்பவர் முதல் கடைநிலை ஊழியர் வரை அனைவரும் சிந்திக்க வேண்டிய ஒன்று. தேவைக்கும் அதிகமாக வைத்திருப்பவன் எவனும் திருடன் என்று காந்தியடிகள் கூறுவது இங்கு நினைவுகூரத்தக்கது.

**நலமான மதிப்பீடுகள் தேவை:** உலகைப் படைத்த இறைவன் அதனை மனிதனுக்கும் அவனது வழிமரபினர் ஒவ்வொருவருக்கும் உரிமையாக்கினார். தனி மனித சுதந்திரத்தை பயன்படுத்தி இயற்கையையும் அதன் வளங்களையும் பராமரிக்கவும் பாதுகாக்கவும் கடமை உண்டு என்பதை மறந்து, அதனை சுரண்டவும், (exploiting), சீரழிக்கவும் (degenerating) இல்லாமல் போகச் செய்யவும் (extincting) முயல்வது, இயற்கைக்கும் அதைக் கொடையாக அளித்த இறைவனுக்கும் எதிரான பாவமாகும். இதிலிருந்து விடுபட வேண்டுமெனில் மதிப்பீடுகளை சரிபார்க்க வேண்டும், அகவாழ்வை ஆழப்படுத்தவும், அகலப்படுத்தவும் வேண்டும். இதற்கு அடிப்படையாக அன்பு (Love), கருணை (Compassion), இரக்கம் (Mercy), பகிர்வு (Sharing), மன்னிப்பு (forgiving), ஈகை (almsgiving), நீதி (Justice), நேர்மை (Sincerety), உண்மை (Truth), ஏற்பு (acceptance), தியாகம் (Sacrifice), விட்டுக் கொடுத்தல் (adjustment), தாழ்ச்சி (humility), பொறுமை (patience), குழும மனப்பான்மை (community spirit) ஆகிய மனித, தெய்வீக பண்புநிலை மதிப்பீடுகளை வளர்த்துக்கொள்ள வேண்டும். வாழ்வு வளம் பெற, **அகவாழ்வு திடம் பெற இத்தகைய மதிப்பீடுகள் அவசியம்.** இத்தவக்காலத்தின் எஞ்சிய நாட்களை இதற்கு பயன்படுத்துவது நலம் பயக்கும். ●



✦ **மும்பையில் அமைதிக்கான 7 மணி நேர தவக்கால ஊர்வலம்:** மும்பை நகரில், ஏறத்தாழ 25,000 மக்கள் ஒன்றிணைந்து, அமைதிக்கான 7 மணி நேர தவக்கால ஊர்வலம் ஒன்றை நடத்தியுள்ளனர். சனிக்கிழமை இரவு 10.30 மணிக்குத் துவங்கிய இந்த தவ ஊர்வலத்தில், கத்தோலிக்கர்களுடன் பிற கிறிஸ்தவ சபையினரும், ஏனைய மதத்தவரும் கலந்துகொண்டனர். 20 கி.மீ. தூரத்தை 7 மணி நேரம் கடந்த இந்த அமைதி ஊர்வலம், ஞாயிறு காலை 5.30 மணிக்கு, மும்பையின் மலைமாதா பசிலிக்காவை அடைந்தபோது, அங்கு திருப்பலி நிறைவேற்றி, மறையுரை வழங்கினார், மும்பைப் பேராயர், **கர்தினால் ஆஸ்வால்டு கிரேசியஸ்.** இந்தியாவில் ஒவ்வொருவரும் அமைதியிலும், நல்லிணக்கத்துடனும் ஒன்றிணைந்து வாழ இறைவனை நோக்கி செபிப்பதாகக் கூறிய கர்தினால் கிரேசியஸ் அவர்கள், ஒவ்வொருவரும் தங்கள் மத நம்பிக்கையுடன் அனைத்து மதங்களையும் மதிக்கும் சகிப்புத் தன்மையில் வாழ வேண்டும் என்று விண்ணப்பித்தார். அமைதியின் அரசியான அன்னை மரியா, துயர்களின் அன்னை மரியா, சிலுவையைச் சுமக்கும் இயேசு, புனித வளன் என நான்கு திரு உருவச் சிலைகளை சுமந்து, இவ்வூர்வலத்தில் பங்கேற்ற மக்களில், பாதிக்கும் மேற்பட்டோர் இளையோர் என்பது குறிப்பிடத்தக்கது. - AsiaNews

வாரச் சிந்தனை

குருத்து ஞாயிறு (09-04-2017)

எசா.50:4-7; பிலி. 2:6-11; மத்.26:14-27:66

# தாவீதின் மகனுக்கு ஓசான்னா

**அருள்திரு. D. அலெக்சாண்டர்,**
**உதவி பங்குதந்தை, இறையூர்.**

**ம**னிதனை மீட்க மாபரன் இயேசு முன்வந்தார். அந்த மீட்பை மனிதன் பெறவும் தயாராகிறான். இயேசுவை அரசராக ஏற்றுக்கொண்டு அவர் காட்டும் வழியில் நடக்க முற்படுகின்ற மக்கள் அவருக்கு ஓசான்னா கீதம் பாடியும், குருத்தோலைகளை ஏந்தியும் வரவேற்றார்கள். இத்தகைய மேன்மையான சூழல் இயேசுவின் உள்ளத்தில் முழுமையான மகிழ்வை கொடுத்தது என்று கூற முடியாது. ஏனென்றால் இப்போது இம்மக்கள் பாடுகின்ற புகழ்ச்சி கீதம் சில காலங்களில் எதிர்ப்பின் கோஷமாக மாறும் என்பதை அவர் அறிந்திருந்தார். இப்போது புகழ்கின்ற இவர்கள் பிறகு எதிர்க்கவும் செய்வார்கள் என்பது அவருக்கு தெரியாமல் இல்லை. இருப்பினும் அவர்களின் இந்த ஆரவார வரவேற்பை ஏற்றுக் கொள்கிறார். ஆக வெளிப்புறத்தில் இன்பமும் மனதுக்குள் இன்னலும் கலந்த ஒரு பவனியாகவே ஆண்டவரின் எருசலேம் பவனி அமைந்திருந்தது.

**மனித நிலைக்குத் தாழ்த்தினார்:** இன்றைய முதல் வாசகம் இறைவனால் தேர்ந்து கொள்ளப்பெற்ற ஊழியர் அடையும் துன்பங்களை விளக்குகிறது. இறை ஊழியர் துன்பங்கள் அடைந்தாலும் அவை துன்பங்களாகவே இருந்து விடுவது இல்லை. ஏனென்றால் ஆண்டவர் அவரோடு இருப்பதாக அவர் மாட்சிபடுத்தப்படுவார். கடவுள் நிலையிலிருந்து மனித நிலைக்குத் தன்னையே தாழ்த்திக் கொண்ட இயேசு அந்த மனித நிலையிலும் இன்னும் அதிகமாக தன்னை தாழ்த்தி ஓர் அடிமை நிலைக்கு கையளிக்கப்படுகிறார். இருப்பினும் தந்தை அவரை அதே நிலையில் விடமாட்டார். மாறாக அவரை மாட்சி படுத்துவார்.

**அடிமை நிலைக்கும் தாழ்த்தினார்.:** கடவுள் மனிதராக இருந்த இயேசு அந்த மனித நிலையிலிருந்தும் இன்னும் அதிகமாக தன்னைத் தாழ்த்திக் கொண்டு ஓர் அடிமை போல பிறரால் ஏளனம் செய்யப்படுகிறார். ஓர் அரசனைப்போல வரவேற்பு கொடுக்கப்பட்டு அதே மக்களால் சில நாட்கள் கழித்து தூற்றப்படுவது என்பது மிகவும் கொடுமை. ஒருவரை உயர்த்திப் பேசிய அதே வாயால் தாழ்த்திப் பேசுவது அவருக்கு கொடுப்பதும் தண்டனையில் வலியை ஆழமாக்கும். அத்தகைய துன்பத்திற்கும் தயாராகத்தான் இயேசு இப்பவனியில் பங்கேற்கிறார். புனித சின்னப்பர் இரண்டாம் வாசகத்தில் தாழ்ச்சி என்ற பண்பை மிகவும் வலியுறுத்துவதைப் பார்க்கிறோம். இயேசுவிடம் விளங்கிய தாழ்ச்சி கிறிஸ்தவ மக்கள் ஒவ்வொரு வரிடத்திலும் விளங்க வேண்டும். இயேசுவின் மனநிலையை நாம் பெற்றிருந்தால் அவரைப்போல தந்தையால் மகிமைப்படுத்தப்படுவோம்.

**குருத்தோலைப் பவனி:** குருத்தோலை பவனி மீட்பின் மறை பொருளை நமக்கு உணர்த்துகிறது. இதைக் கொண்டாடுவதன் வாயிலாக இயேசு நமக்காக பட்ட பாடுகளை தியானிக்கிறோம். இன்னும் பொருளுள்ள கிறிஸ்தவ வாழ்வுக்கு தயாராகிறோம். இயேசுவை சந்திக்க இப்பவனி உதவுகிறது. இயேசுவை நம் அரசராக ஏற்றுக்கொள்ள முடிகிறது. அவருடைய ஆட்சியின் மக்களாக நம்மையே இப்பவனி எடுத்துக்காட்டுகிறது.

இயேசு எருசலேமிற்குள் நுழைந்தபோது மக்கள் அவரை அரசராக வரவேற்றார்கள். ஆனால் பிறகு அவர்களின் மனநிலை மாறிப்போனது. நாம் இந்த நாளில் இயேசுவை நமது அரசராக, ஆண்டவராக, ஆயனாக ஏற்றுக் கொள்கிறோம். ஆனால் அந்த மக்கள் மனம் மாறிபோனது. போல நமது மனம் மாறிப்போகக் கூடாது. அவரது பாடுகளை சிந்திக்கின்ற இக்காலம் நம்மை இன்னும் அவரோடு ஒன்றிக்கச் செய்ய வேண்டும். மாறாக அவரை விட்டு விலகிச் செல்லக் கூடாது நமக்காக பாடுபட்ட இயேசுவை நாம் மகிமை செய்ய நமது பாவ வழிகளை விட்டு அவர் காட்டும் வழியில் அவரை பின்தொடர்பவர்களாக இருக்க வேண்டும் என்பதை உணர்த்தவே இந்தப் பவனி நம்மை அழைக்கிறது.

**சிலுவை வழி சிகரம் தொட:** சிலுவை இல்லாமல் சிம்மாசனம் கிடையாது. துன்பம் இல்லாமல் இன்பம் கிடையாது. பாடுகள் இல்லாமல் பரலோகம் செல்ல முடியாது. இந்த பாடுகள் இயேசுவுக்கு மாபெரும் வெற்றியாக மாறும். தந்தையின் திருவுளம் நிறைவேற்றி தந்தையால் மாட்சிபடுத்தப்பட இருக்கும் இயேசு அவரை போல மனதை நாம் பெற அழைக்கிறார். நம் துன்பம் மகிழ்வாய் மாற அவர் வழி நடப்போம். ●

---

✦ உலகின் மிகப்பெரிய மறைமாவட்டமான மிலான் உயர் மறைமாவட்டத்திற்கு 25-3-2017 சனிக்கிழமை ஒரு நாள் மேய்ப்புப்பணி பயணம் மேற்கொண்டார் திருத்தந்தை பிரான்சிஸ். மிலான் நகருக்கு, அன்று காலை 8.30 மணிக்கு லினாத்தே விமான நிலையத்தில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் வந்து இறங்கியபோது அவரை வரவேற்கும் வண்ணம் மிலான் உயர் மறை மாவட்டத்தின் 1107 பங்குகளில் உள்ள பங்கு ஆலயங்கள், சிற்றாலயங்கள், துறவு இல்லங்களில் ஒரே நேரத்தில் கோவில் மணிகள் ஒலித்தன.

வத்.வானொலி, 25.3.2017

**மிஷன் அச்சகத்தில் கிடைக்கும்**

| | |
|---|---|
| 1) வியாகுல பிரசங்கம் - | ரூ. 50.00 |
| 2) சேசுநாதருடைய திரு இருதய வணக்கமாதம் | ரூ. 100.00 |

தபால் செலவு தனி.

## ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம்

மேல்நாரியப்பனூர், புனித அந்தோணியார் மேல்நிலைப் பள்ளி முதல்வர் அருள்திரு C. **சகாயராஜா,** அவர்களின் தந்தை திரு. **லமாத் சின்னப்பன்** (வயது 83) அவர்கள் 26.3.2017 அன்று உடல் நலக் குறைவால் வேலந்தாங்கலில் இறையடி சேர்ந்தார். 27.3.2017 திங்கள் மாலை 4.30 மணி அளவில், வேலந்தாங்கல் தூய விண்ணேற்பு அன்னை ஆலயத்தில் இடம்பெற்ற அன்னாரின் அடக்கச் சடங்கு திருப்பலியை அருட்திரு. C. **சகாயராஜா** அவர்கள் தலைமையேற்று நிறைவேற்றினார். நமது உயர் மறை மாவட்ட பேராயரின் பிரதிநிதி பேரருட்திரு. ஆ. லூயிஸ் மற்றும் 60 அருட்தந்தையர்கள் இக்கூட்டுத் திருப்பலியில் இணைந்து செபித்தனர். அருட்கன்னியர்களும் ஏராளமான இறை மக்களும் இத்திருப்பலியில் பங்கேற்று செபித்தனர். திருப்பலிக்குப் பின் திரு. லமாத் சின்னப்பன் அவர்களின் திருவுடல் வேலந்தாங்கல் கல்லறையில் நல்லடக்கம் செய்யப்பட்டது. தந்தையைப் பிரிந்து துயருறும் அருட் தந்தை C. **சகாயராஜா** அவர்களுக்கும், அவரது சகோதரர் திரு. **அக்சிலியம் ஃபெலிக்ஸ்** AEO (திருக்கோவிலூர்) (சர்வவியாபி எழுத்தாளர்) அவர்களுக்கும் மற்றும் அவரது உடன்பிறந்தோர் மற்றும் உறவுகள் அனைவருக்கும் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம். இறையடி சேர்ந்த திரு. லமாத் சின்னப்பன் அவர்களின் ஆன்மா இறைவனில் இளைப்பாற்றி அடைவதாக. - ஆசிரியர்.



## நசரேத்தூர் மரியா

10

Sr.M.லில்லி மரி ME, புதுச்சேரி.

மரியா தன் கன்னிமையை இறைவனுக்கு அர்ப்பண மாக்கியிருந்தார் என்பதை முன்னமே நாம் வாசித்திருக்கிறோம். புதிய ஆச்சரியம் என்னவென்றால் இறைமகனுக்குத் தன்னைத் தாயாகும் பொறுப்பை அறிவிக்கிறார். விவிலியம் பெரும்பாலும் இப்படிப்பட்டச் சூழல்களில் "நீ கருவுறுவாய்" என்று மட்டும் கூறும். ஆனால் இங்கு "மகனைப் பெறுவீர்" என்கிறது. மேலும், வானதூதர் தன் தூதுரையைத் தொடருகிறார்: "அவர் பெரியவராய் இருப்பார். உன்னதக் கடவுளின் மகன் எனப்படுவார். அவருடைய தந்தை தாவீதின் அரியணையை ஆண்டவராகிய கடவுள் அவருக்கு அளிப்பார். அவர் யாக்கோபின் குடும்பத்தின் மீது என்றென்றும் ஆட்சி செலுத்துவார். அவருடைய ஆட்சிக்கு முடிவே இராது".

இதுவரை மரியா தூதுரையைக் கவனமாகக் கேட்டுக்கொண்டிருந்தார். (இந்தச் செய்திகளை எல்லாம் லூக்காவுக்கு அவர்களே சொல்லியிருக்க வேண்டும்.)

**"...அவருடைய தந்தை தாவீதின் அரியணையை..."** இந்த வார்த்தையும் மரியாவுக்குக் கலக்கத்தை ஏற்படுத்தியிருக்க வேண்டும். அப்படியானால் தாவீதின் வழி வந்த யோசேப்பு இக்குழந்தைக்குத் தந்தை ஆவாரோ? இப்படிப்பட்ட எண்ணங்கள் மனித மனதில் தோன்றுவது இயல்புதானே! எனவே, மரியா வானதூதரிடம் "இது எப்படி நிகழும்? நான் கன்னி ஆயிற்றே!" என்றார். வானதுதார் அவரிடம் "தூய ஆவி உம் மேல் நிழலிடும். ஆதலால் உம்மிடம் பிறக்கப்போகும் குழந்தை தூயது. இறைமகன் எனப்படும்." (லூக் 1:35)

**இந்த அரிய காட்சியை ஆழ்ந்து தியானித்து** மகிழ வேண்டும். கலிலேயப் பெண்ணாகிய எளிய மரியா கடவுளின் தூதர் முன் கேள்வி கேட்டுப் பதிலும் பெறுகிறார்: "அக்குழந்தை இறைமகன் எனப்படும்."

வானதூதர் கடவுளின் மற்றொரு வல்லச் செயலையும் மரியாவுக்கு அறிவிக்கிறார்: "உம் உறவினராகிய எலிசபெத்தும் தம் முதிர்ந்த வயதில் ஒரு மகனைக் கருத்தரித்திருக்கிறார்... ஏனெனில், கடவுளால் இயலாதது ஒன்றுமில்லை." (லூக் 1:36) மரியா கடவுளின் ஒளியைப் பெற்று இறைத்திட்டத்துக்குத் தன்னைக் கையளிக்கிறார்: "இதோ! ஆண்டவருடைய அடிமை. உமது வார்த்தையின்படியே எனக்கு ஆகட்டும்". (லூக் 1:38)

மரியா தன் உடலில் அந்தக் கணத்தில் உரு இல்லாத கடவுளுக்கு உரு கொடுக்கிறார். பேரொளி தன்னை ஊடுருவுவதை சொல்லில் விவரிக்க முடியாத விதமாக அவர்கள் உணர்ந்திருக்க வேண்டும்.

**மரியா - எலிசபெத்து சந்திப்பு:** மரியாவுக்குத் தூதர் சொன்ன இறுதிச் செய்தி அவருடைய உறவினரான எலிசபெத்து தாய்மைப் பேறு அடைந்துள்ளார். அதுவும் மீட்புப் பணியில் பங்கு பெறும் ஒருவரை அவர் கருத்தாங்கியிருக்கிறார். இரு அன்னையர்கள் சந்திக்கின்றனர். இருவரும் இயற்கையின் நியதிக்கு அப்பாற்பட்டுத் தாய்மைப் பேறு அடைந்துள்ளனர். ஒருவர் கருவுற முடியாத முதுமை. மற்றவர் கன்னிமையின் தூய்மையில் தாய்மை. கன்னி மரியாளுக்கோ வானதூதரே அனைத்தையும் விரிவாகச் சொல்லிவிட்டார். ஆனால், எலிசபெத்துக்கு எந்த தூதும் அறிவிக்கப்படவில்லை. அவருடைய கணவருக்குத் தான் இறை வெளிப்பாடு கிடைத்தது.



**மரியா பிறர் அன்பால் தூண்டப்பட்டு** பணி செய்ய விரைகிறார். யூதேயாவில் உள்ள மலை நாட்டுக்குச் செல்கிறார். ஏன் இந்த அவசரம்? காரணம் தூய ஆவி அவரிடம் வந்துள்ளார். தூய ஆவியைப் பெற்றுக்கொண்டவர்களால் சும்மா இருக்க முடியாது. செயலாற்ற வேண்டும். அதுவும் விரைந்து செயலாற்ற வேண்டும். மரியாவுக்குத் தூய ஆவியானவர் உள்ளிருந்து உந்து சக்தி தருகின்றார். வழிப்பயணத்தின் இடையூறுகள் மரியாவின் ஆர்வத்தைத் தடுத்து நிறுத்தவில்லை. திருடர்களும் வழிப்பறி கொள்ளை யர்களும் நடமாடும் பாதையில் தன் பயணத்தை மேற்கொள்ள முடிவு செய்து புறப்பட்டுவிட்டார். தனியாகவா? இல்லை. அவருடன் தன் மகன் இயேசு இருக்கிறார். தூய ஆவியும் உடன் வருகிறார். இந்த விசுவாசமும் விசுவசித்தவரான மரியாவின் செயல்பாடுகளுக்கு விளக்கம் தருகின்றன.

எருசலேம் செல்லும் வியாபாரக் கூட்டத்தினருடன் மரியா சென்றிருக்க வேண்டும். வயது முதிர்ந்த உறவினருக்கு உதவப்போகும் மகிழ்ச்சி அவருக்கு ஊக்கம் தந்திருக்க வேண்டும். விசுவாசமும் பிறரன்பும் அவரை வழிநடத்துவதை இங்கு நாம் அறியலாம்.

வளைந்து நெளிந்து செல்லும் ஏற்றத்தாழ்வான பாதையில் பயணம் செய்வது எவ்வளவு கடினமாக இருந்திருக்கும் என்பதை நன்கு புரிந்துகொள்ளலாம்.

இதில் நாம் மனதில் நிறுத்தித் தியானிக்க வேண்டியது: மரியா எங்கு சென்றாலும் தனியாகச் செல்வதில்லை இறைமகன் இயேசுவோடும் தூய ஆவியோடும் செல்கிறார். மரியா நம்மிடமும் அவ்வாறே வருகிறார். – தொடரும்

---

**அன்னைக்குக் கரம் குவிப்போம்–7**



(முற்கால தற்காலச் செபங்கள்–தமிழாக்கம் ச.லில்லி மரி) 02–04–2017

**Frei Roberto B. Lopes**

பாவிகளாகிய எங்களுக்காக வேண்டிக்கொள்ளும். அன்னையே என் துயரங்களில் நான் என்னை இழக்கிறேன். என் வேதனைகளில் உம் பெயரைக் கூவி அழைக்கிறேன். இறுதியாக உம்மிடம் என்னைக் கையளிப்பது என்று முடிவு செய்தேன்.

புண்பட்ட என் ஆன்மாவையும் உடைந்த என் உடலையும் கையளிக்கிறேன். என் பார்வையை எங்குத் திருப்பினாலும் பாவத்தின் கவர்ச்சியைக் காண்கிறேன். என் சின்ன இதயம் அதில் சிக்கித் தவிக்கிறது. உமது அருளுக்கு நான் தகுதி அற்றவன். ஆனாலும் நான் உம்மிடம் வரலாமா? உமது அளவற்ற நன்மையை நான் அறிவேன். எனவே வருகிறேன். பாதுகாக்கும் உம் இறக்கைகளை விரித்து என்னை ஏற்றுக்கொள்ளும். என்னை அரித்துக்கொண்டிருக்கும் தீமைகளுக்கு மரித்தவனாக உம்மிடம் வருகிறேன். பாவிகளான ஆன்மாக்களின் இனிய புகலிடமே! அன்னையே! உம்மைத் தேடி வருகிறேன்.

---

✦ "கருவில் உருவானது முதல் மரணம் வரை, மனித வாழ்வெனும் புனிதக் கொடையை அக்கறையுடன் எடுத்துச் செல்வதே, அனைத்து வகையான வன்முறைகளையும் தடுப்பதற்கான சிறந்த வழி" - டுவிட்டர் செய்தியில் திருத்தந்தை பிரான்சிஸ.

---



### இவ்வாரத்தின் இறைவார்த்தை

இலாசரே வெளியே வா என்று கூப்பிட்டார். இறந்தவர் உயிரோடு வெளியே வந்தார்." (யோவான் 11:43)



# மனித நேய வாழ்வும் வழிபாடும்

– சுவாமி ஆ. லூயிஸ்.

**வா**ழ்வும் வழிபாடும்" என்பதன் மைய உணர்வின் அடித்தளங்களைப் பொதுவாக உணர்ந்தப் பிறகு இப்பொழுது வாழ்வும் வழிபாடும் என்பதை நமது வாழ்வோடும் விசுவாசத்தோடும், நடைமுறை வாழ்வும், அன்றாட வழிபாடும் எவ்வாறு சிறப்பாக நாம் அமைத்துக்கொள்ள இயலும் என்பதற்கு கிறிஸ்தவ வாழ்வும் வழிபாடும் என்று குறிப்பாக கவனம் செலுத்துவோம். கிறிஸ்தவ வாழ்வும் வழிபாடும் உறுதியாக உதவிடும் என்று நம்புவோம்.

படைப்பு கடவுளுடைய உடல், திருமுழுக்குப் பெற்றவர்கள் கிறிஸ்துவின் மறைஉடல், நாம் ஒவ்வொருவரும் மனித உடலைப் பெற்றுள்ளோம். இம்மூவகை உடலிலும் மனித நேயம் எவ்வாறு மணந்து மலர வேண்டும் என்பதை உணர்வோம். உண்மைகளை பல்வேறு கணங்களில் காணும்போது தொடர்பும், உறவும், ஆழமும் அகலமும் நமக்குள் வளர வாய்ப்புண்டு. விசுவாச உணர்வோடு உண்மைகளையும் அனுபவங்களையும் தரிசிக்க முயல்வோம்.

***மனித நேயம்:*** மனித நேயத்தை சுவைப்பர், அதை பயன்படுத்தமாட்டார்கள், அதை சுவைக்காதவர்கள் பயன்படுத்தி ஆதாயம் தேடுவர் என்பதற்குள் இருக்கும் நன்மை தின்மையை புரிந்து கொள்வீர். நன்மை தீமை என்ற போராட்டத்தில் தேர்ந்து தெளிவு பெற்று இயேசுவின் பிரியத்திற்கு உடன்படுவது முக்கியம். வீணான வம்பு தும்புகளுக்கு நாம் உணர்ச்சிவசப்பட்டு ஆளாகி மனித நேயத்தைப் பிளவுபடுத்தி கொச்சைப்படுத்திவிடக் கூடாது. இவ்வாறு இன்று அங்கும் இங்கும் இடம் பெறுவதால் இந்த கவன ஈர்ப்பை முன் வைப்போம்.

படைப்பின் கொடுமுடி மனிதம். மனித நேயத்திற்குமேல் இறைநேயம், மனித நேயத்திற்குக்கீழ் இயற்கை நேயம் என்ற அளவீட்டை நாம் மீறுவது நல்லதல்ல. மனித நேயத்தில் "சமத்துவம்" என்ற இறையாட்சி மதிப்பீட்டை கடந்த காலத்தில் மனித இனம் பெரிதும் ஏற்காமல் இருந்தது. இப்போது மனித இனத்தின் வளர்ச்சியில் மனித நேயம் என்பதை வளர்த்து வந்துள்ளோம். கடந்ததைக் கூறி நிகழ்காலத்தின் நேயத்தை நெருக்கடிக்கு ஆளாக்கக் கூடாது. நிகழ் காலத்தை நிரந்தரமாக்காது, வருங்காலத்தில் மனித நேயம் படைப்பு, மனிதம் முழுவதும் நிறைவடைவதை நாம் மறுக்கவும் கூடாது. அறிவையும் அனுபவத்தையும் விட இறை ஞானத்தை மேலாக நாடுவோம்.

ஒருங்கிணைந்த பார்வையில் மனித நேயத்தின் பொருளை உணர்வோம், புரிந்து கொள்வோம், நம்புவோம். இதில் விவாதம், வேதனை, பிளவு, பிரிவு என்பதற்கு இடமில்லை. ஆனால் அதுதான் முடிவு என்று வாதாட இடமில்லை. மெய்மையின் ஒரு பகுதி அல்லது பெரும்பகுதி என்று புரிந்து கொள்வோம். முழு மெய்மைதான் உண்மையான விடுதலையை வழங்கும்.

படைக்கின்றவர் படைப்பில் இருக்கின்றார். படைப்பைக் கடந்தும் இருக்கின்றார். கடந்திருப்பதையும் உடன் இருப்பதையும் இணைத்து உயிர்த்த ஆண்டவரில் இருக்கின்றார். கடவுள், மகன், ஆவி மூவரின் பிரசன்னத்தைத் தன்னிலும், அயலானிலும், படைப்பிலும் இருப்பதை மதிப்பது, பேணுவது, வளர்ப்பது மனித நேயமாகும். இயற்கையின் நேயமாகும், மூவொரு இறை நேயமாகும். எதையும் யாரையும் நாம் பிரிக்காது பிணைத்துப் பார்ப்பது முறையாகும். இது உடனடியாக இடம் பெறாது, படிப்படியாகத்தான் நம்மில் இடம் பெறும். அவசரப்படக் கூடாது ஏனெனில் கடவுள் அவசரப்படுவதில்லை. பொறுமையில்தான் இறையரசைப் பெற இயலும்.

***வாழ்வே மேலானது:*** இன்றைய உலகில் விலையில்லா சரக்கு மனித வாழ்வாகி வருகிறது என்பதைக் காணும்போது நாம் எல்லாருமே கண்ணீர்விட வேண்டியவர்களாகிறோம். ஒவ்வொரு நாளும் வாழ்வைப் பற்றி கணக்கு எடுத்தால் நாம் கடவுளின் பிள்ளைகளா, இயேசுவின் சீடர்களா, ஆவியின் ஆலயங்களா, சமயங்களைச் சார்ந்த சகோதர சகோதரிகளா என்பது கேள்விக்கு ஆளாகிறது. எதார்த்தங்களைப் பார்த்தால் நாம் மிகவும் வருத்தப்படுவோம்.இதற்குப் பரிகாரம், பதில் மொழி யார் கொடுப்பது? சாவின் பண்பாட்டிலிருந்து வாழ்வின் பண்பாட்டிற்குப் பயணிக்க பாப்பரசர்கள் தொடர்ந்து அழைத்துக்கொண்டிருக்கின்றனர். இன்றைய உலகின் வளர்ச்சி எல்லாம், வாழ்வின் முன் ஒன்றுமில்லை. வாழ்வதற்கே வாழ்வின் கடவுள் வாழ்வைத் தொடர்ந்து வழங்கிக் கொண்டு வருகிறார். கடவுள் தன்னையேத் தருகின்ற தானத்தைத் தகுதியோடும் தயவோடும் தாராள உள்ளத்தோடும் பெற்று வாழ்வை வாழ வைப்பதே அனைவரின் இலட்சியமாகட்டும்.

காண முடியாத வாழ்வின் மெய்மையை புரிந்து கொள்ளவும், நம்பவும் முயல்வோம். வாழ்வை ஆற்றல், ஆவி, உள்உறையும் மெய்மை, சக்தி, நம்பிக்கை என உணர இயலும். நாம் புலன்களால் உணர்வது வாழ்வின் வெளிப்பாடாகும். நமது புத்தியினால் உணர்வதும் வாழ்வின் வெளிப்பாடாகும். நம்பிக்கையில் புரிந்து உணர்வது வாழ்வாகும். நமது வாழ்வின் உணர்வு நிலை எந்நிலையில், எவ்வளவு ஆழமாக, அர்த்தமுள்ளதாக அமைந்து வருகின்றது என்று கவனிப்பது நம் ஒவ்வொருவருக்கும், அனைவருக்கும் அன்றாடம் தேவைப்படுகிறது. கடவுள் கொடுக்கும் அருளின் காலத்தில் நமது வாழ்வை வீணாக்கக்கூடாது. பயன்மிகு முறையில் பொருள் பொதிந்த நிலையில் மிகுதியான வாழ்வைக் கொண்டாடுவது ஓர் உண்மையான மகிழ்வாகும். தான் தனது வாழ்வை இரசித்து ருசித்தால்தான் ஏனையோரின் வாழ்வை மதிக்கவும் வளர்க்கவும் நாம் விரும்புவோம். தனது வாழ்வை சபிக்கின்றவர்கள், மற்றவர்கள் வாழ்வையும் சபிப்பார்கள். வாழ்வு வாழ்வதற்கே வழங்கப்படுகிறது. வாழ்வு மாறுபடுகிறதே அன்றி அழிக்கப்படுவதில்லை. இவ்வுலக வாழ்வு நிறைவு பெறும் போது விண்ணக வாழ்வு ஆன்மாவுக்கும், மண்ணக வாழ்வு உடலுக்கும் தொடர்கிறது. சாவே, உன் கொடுக்கு எங்கே என்று இயேசு சாவை வாழ்வாக மாற்றி நமக்கு வழங்குகின்றார்.

***உடன்படும் வழிபாடு:*** வாழ்வு எப்படியோ அப்படியே வழிபாடும் இடம் பெறும். வாழ்விலிருந்து எழுவது எல்லாம் வழிபாடுதான். இத்தகையப் பரந்த விரிந்த புரிந்து கொள்வதை குறுக்கி, சிறிய வட்டத்திற்குள் வழிபாட்டினை சிறைப்படுத்திட வேண்டாம். பரந்த பார்வையில் வழிபாட்டினைப் பொருத்திப் பார்ப்போம்.

கடவுளைப் போல நாமும் படைக்கும் வழிபாடு, மீட்கும் வழிபாடு, புனிதப் படுத்தும் வழிபாட்டினைப் பொதுவாக, இயல்பாக, சாதாரணமாக மேற்கொள்ளத் தூண்டுதல் பெறுகின்றோம். இதைப் பரவலாக்கவே குறிப்பிட்ட, சிறப்பான வழிபாடுகள் அனைத்து சமயங்களிலும், பண்பாடுகளிலும், கலாச்சாரத்திலும் இடம் பெற்று வருகின்றன.

மனித நேயத்தில் இடம் பெறுபவை எல்லாம் மனித நேய வழிபாடாகும். மனிதம் இயல்பிலேயே சமூகத் தன்மையையும், சமயத் தன்மையையும், தனித்தன்மையையும், பொதுத் தன்மையையும் தனக்குள் கொண்டிருக்கும் ஒரு மாபெரும் புதையலாகும். வளர வளர இப்புதையலை மலர வைப்பது அவரவர் பொறுப்பும் கடமையுமாகும். மும்பெரும் வழிபாட்டு வாழ்க்கை முறையில் கடவுளின் திருவுளத்தையும், திட்டத்தையும் நாம் உணர்ந்து நிறைவேற்றும் போது சிறப்பான புனிதமான மனித நேய வழிபாடாகிறது.

***முழுமையான மனித நேயம்:*** சிதைவுற்ற மனிதத்தை, சிறப்பாக ஊன்உடல் ஏற்பில் இயேசு சிற்பமாக்கி கடவுளுக்குப் பலியாக படைத்து வருகிறார். இயேசுவில் வழிபாடும் வாழ்வும் ஒன்றாக நன்றாக, நலமாக வளமாக இருந்து இயங்கியது போல நம்மிலும் இடம் பெறவே, "இதை என் நினைவாகச் செய்யுங்கள்" என்றார். திருப்பலியின் ஆழத்தைத் தொடர்ந்து புரிந்து விசுவசிப்போம். பிறந்தார், இறந்தார், உயிர்த்தார், என்றும் நம்மோடு உலக முடிவுரை இருக்கின்றார். கிறிஸ்தவ வாழ்வும் வழிபாடும் நமக்கும் உலகிற்கும் கடவுள் கொடுத்த மாபெரும் கொடை. உணர்ந்து வாழ்வோம், உவப்புடன் வழிபடுவோம். ●

## விவிலியம் காட்டும் விடியல் வாழ்க்கை

–டாக்டர் அ. மதலைமுத்து, புதுவை–3.

**பெற்றோரின் கொடைகள்:** பெற்றோர்கள், சிறப்பாகத் தாய்மார்கள், இயல்பிலேயே கொடையாளர்களாக இருக்கிறார்கள். அவர்கள், தம் வாழ்க்கை முழுவதும் மகனுக்கும் மகளுக்கும் அனைத்துவித ஆசீர்வாதங் களை பொழிகிறார்கள். அவர்கள் தம் பிள்ளைகள் கடவுளை நம்பவும், அவரை நெருங்கி தெரிந்து கொள்ளவும், பிறரை அன்பு செய்யவும் ஊக்கமளிக்க வேண்டும். "நீங் களும் உங்கள் பிள்ளைகளும்.... உங்கள் கடவுளாகிய ஆண்டவருக்கு அஞ்சி... (கடவுள்) கட்டளையிட்ட எல்லா நியமங்களையும் கட்டளைகளையும்... கடைபிடிப்பீர்களாக! இதனால் நீங்கள் நெடுநாள் வாழ்வீர்கள்." (இ.ச.6:2) மேலும், "உன் முழு இதயத்தோடும், உன் முழு உள்ளத்தோடும், உன் முழு ஆற்றலோடும், உன் கடவுளாகிய ஆண்டவரிடம் அன்பு கூர்வாயாக. நீ அவற்றை உன் பிள்ளைகளின் உள்ளத்தில் பதியுமாறு சொல்; உன் வீட்டில் இருக்கும்போதும், உன் பயணத்தின் போதும்... அவற்றைப் பற்றி பேசு." (இ.ச.6:5,7) என்று விவிலியம் வலியுறுத்துகிறது.

**அவசர நிலை:** இன்று நாமும் நம் பிள்ளைகளும் நுகர்வோர் கலாச்சாரம், வன்முறை ஆதிக்கம், ஏழைகள் தற்கொலை மற்றும் 'மதசார்பற்ற நாடு' என்று கூறிக் கொள்ளும் போலித்தன அரசியல் சதுரங்க சிக்கலில் அகப்பட்டு 'சுருங்கி' வாழ்ந்து கொண்டிருக்கிறோம். ஆகவே, நாம் நம் பிள்ளைகளுக்கு, முன்பெப்போதும் இல்லாத அளவிற்கு இப்போது கவனத்தோடும் பொறுப்போடும் விவிலிய கொள்கைகளை நயமாக கற்பிக்க வேண்டியது அவசியமாகும். அவற்றில் முக்கியமான கொள்கை, கடவுளுக்குக் கீழ்ப்படியுங்கள், விளைவுகளை அவரிடம் விட்டு விடுங்கள், மக்களை ஆண்டவருக்காக நேசியுங்கள், என்பதாகும். சிறார்களுக்கு உண்மைகளை சொல்லிக் கொடுங்கள், இதனால் அவர்கள் பொய்களையும் மற்றும் போலிகளையும் அடையாளம் கண்டு கொள்வார்கள்.

**இரட்டிப்பு பொறுப்பு:** பிள்ளைகள், நீங்கள் தொடர்ந்து நம்பிக்கைப்படியே வாழ்வதைக் காணவேண்டும். மாறாக, ஆலய சூழலில் ஒரு விதமாகவும், வீதி, வீடு மற்றும் கடைகளில் வேறு விதமாகவும் நீங்கள் பேசுவதையோ, மவுனம் காப்பதையோ, நடந்து கொள் வதையோ பிள்ளைகள் கண்டுபிடித்து விட்டால், "என் அம்மா, அப்பா பொய்யர்கள்" என்று முடிவெடுத்து விடுவார்கள். அதுமட்டுமல்ல, இந்த வாழ்க்கை முறைதான் நடைமுறைக்கு ஒத்துவரும், வெல்லும், என்ற முடிவுக்குப் பிள்ளைகள் வருவார்கள். தவறு செய்வதில், பெற்றோரைப் பின்பற்றி பிள்ளைகள் 'பதினெட்டடி' பாய்வது ஆபத்தல்லவா?

**எதிர்நீச்சல்:** பெற்றோர் சுயக்கட்டுப்பாடோடு வாழ்வதும், பிள்ளைகளை நெறி படுத்தி வாழ வைப்பதும் இமயம் ஏறும் முயற்சியாகும். ஆரம்பத்தில் கூறும் போது குழந்தைகள் புரிந்து கொள்ளாமலோ, கீழ்ப்படியாமலோ விலகுவது இயல்புதான். ஆனால், பெற்றோர் தொடர்ந்து அன்பு காட்டி, விளக்கி, ஊக்கப்படுத்தி, நம்பிக்கையையும், கீழ்ப்படிதலையும் வாழ்ந்து காட்டுவதே நம் சந்ததியை நன்கு வாழவைக்கும். உங்களுக்கோ அல்லது உங்களுடைய குடும்பத்திற்கோ ஒரு தோல்வி அல்லது இழப்பு ஏற்பட்டால் அந்த சூழ்நிலையை ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்துங்கள்; உங்கள் இறைநம்பிக்கையை கைவிடாது வாழ்ந்து காட்டுங்கள், மேலும் குடும்பமாக பிள்ளைகளோடு அமர்ந்து கடவுளிடம் ஜெபியுங்கள். கவலைப் பேரலையை ஜெபப்படகினால் நீங்கள் எவ்வாறு கடந்து கரையேறுகிறீர்கள என்பதைக் கண்டும், உங்களோடு ஜெப துடுப்பு போட்டு ஜெயித்தும், பிள்ளைகள் கிறிஸ்துவ எதிர்நீச்சல் வாழ்க்கையை வாழக் கற்றுக் கொள்கிறார்கள்.

**ஆற்றல் மிகு ஜெபம்:** நாம் கடவுளிடம் "...முழு ஞானத்தையும் ஆவிக்குரிய அறிவுத் திறனையும் (வழங்கி, எங்களுக்கு) வலுவூட்ட வேண்டும் (ஆண்டவரே!)" (கொலோ.1:9-11) என்று ஜெபிக்க அழைக்கப் படுகிறோம். இந்த ஜெபம், உடல் உள்ளம் மற்றும் பொருளாதார அழிவிலிருந்து நம்மை காப்பாற்றும் ஆற்றல் வாய்ந்தது. வரங்களை விரும்பும் சில பெற்றோர், மற்றும் இளைஞர்கள் இந்த அரிய ஜெபத்தை வேண்டி, விடியலைக் கண்டு, மேலும் கடவுளின் கருணை கைவிரலைப் பிடித்துக் கொண்டு அச்சமின்றி நடக்கிறார்கள்.

**கிறிஸ்துவ வாழ்க்கை:** "(ஆண்டவரே நாங்கள்) கடவுளின் திருவுளத்தைப் பற்றிய அறிவை நிறைவாக அடைய வேண்டும்; கடவுளைப் பற்றிய அறிவில் வளர வேண்டும்" (கொலோ.1:9-10) என்று மன்றாடுங்கள். பெற்றோர்களாக, விண்ணகத் தந்தை உங்கள் பிள்ளைகளுக்காக வைத்திருக்கும் வளமான வாழ்க்கையை சுதந்திரமாக வாழுமாறு அவர்களை பராமரிக்க வேண்டும். இயேசு கிறிஸ்துவின் பெயருக்கு மகிமை சேர்க்கும் வகையில் அவர்கள் வாழ கடவுள் உதவுமாறு ஜெபிக்க வேண்டும். நாம் "பயன் தரும் நற்செயல்கள் அனைத்தும் (செய்ய வேண்டும்)" (கொலோ.1:10). கிறிஸ்துவர்கள் உலக மக்கள் மேல் நிரந்தர தாக்கத்தை உண்டாக்க வேண்டும். நாம் கடவுளுக்குக் கீழ்ப்படியும் போது, அவர் நம் வாழ்க்கையை கனிதரும் வாழ்க்கையாக மாற்றுகிறார்.

**இயலாமையும் வல்லமையும்:** "முழு மன உறுதியோடும் பொறுமையோடும் இருக்குமாறு தம் மாட்சிமிகு ஆற்றலுக்கேற்பத் தம் வல்லமையால் அவர் நம்மை... வலுவூட்ட வேண்டும்" (கொலோ. 1:11) என்று மன்றாட வேண்டும். மன்றாட்டுகளும் வாழ்க்கையும் வெற்றியாகும். பிறகு, "மகிழ்ச்சியோடு தந்தையாம் கடவுளுக்கு நன்றி செலுத்துங்கள்" (கொலோ.1:11-12). சில சமயம் வேதனை நிகழ்வுகள் உண்டு. அதிலும், நம் முதிர்ச்சியை கடவுள் மேம்படுத்துகிறார். நன்மைதான்.

**ஆலய வழிபாடு:** கீழ்ப்படியாமைக்காகவோ, தோல்விக்காகவோ பிள்ளைகளை சபித்து விடாதீர்கள். நம் காலத்தை விடவும், கருத்து, மற்றும் உணர்வு சிதைவு கலாச்சாரத்தில் அவர்கள் எதிர்நீச்சல் போட வேண்டியுள்ளது. அவர்களை மன்னித்து விடுங்கள்; புரிந்து கொண்டு இன்னொருவாய்ப்பு கொடுங்கள், மேலும் பாராட்டுங்கள். உங்களோடு பிள்ளைகளை ஆலயத்திற்கு அழைத்து வாருங்கள். இல்லையென்றால், "முக்கியமென்றால் அவர்கள் அங்கு அழைத்துச் சென்றிருப்பார்களே?" என்று பிள்ளைகள் நினைத்துவிட்டால் ஆபத்தல்லவா நண்பர்களே? ●



வெற்றிகரமான 7-ம் ஆண்டின் 14-வது குழு
கிறிஸ்துவ புண்ணியபூமி பயணம் (9 இரவு / 10 பகல்)
ஜோர்டான், இஸ்ரேயல் & எகிப்து
❖ தமிழ்நாடு, புதுவையில் இருந்து இதுவரை 5000க்கும் மேற்பட்ட திருப்திகரமான பயணிகளை அழைத்து சென்றுள்ளோம். ❖ குடும்ப உறுப்பினர்களை அழைத்து செல்வதை போன்ற பாதுகாப்பான அன்பான பயணம். ❖ கூடுதல் இடங்களை பார்க்க கூடிய வாய்ப்பு ❖ அன்பான தந்தையின் Daily Mass ❖ மற்றும் பல.
பயணக்காலம்: 22 ஏப்ரல் - 01 மே 2017 & 3வது வாரம் மே 2017
பயணக் கட்டணம் ரூ.89,500/- 1 நபருக்கு

ஐரோப்பா புனித பயணம் (16 இரவு / 17 பகல்)
பிரான்ஸ், லூர்து; பாத்திமா, ஸ்பெயின், போர்ச்சுக்கல், பதுவா, ரோம், இத்தாலி-வாட்டிகன், சுவிஸ் மற்றும் பல
பயணக் கட்டணம் ரூ.1,98,000/- 1 நபருக்கு
பயணக்காலம்: 15-31 மே 2017
மேலும் தொடர்புக்கு!
SANGAMAM LEISURE MANAGEMENT PVT LTD.,
(Formerly Known as GREATWAY TOURISM PRIVATE LIMITED)
SANGAMAM LEISURE
No.56, 1st Floor, Mission Street, Pondicherry - 605 001.
Ph: 0413-4202322 / 24, Cell : 95970 82240, 98941 02518
www.sangamamleisure.com, E-mail: sangamam.sales@gmail.com



# உலக மீட்பர் காப்பியம்

பேராசிரியர், முனைவர். **ச.சாமிமுத்து,** திருச்சி.



## 16ஆம் படலம்

வாதைகளின் வரிசையிலே மூன்றாவது வருவது கொசுக்களின் வாதை. ஆண்டவரின் ஆணையின்படி ஆரோன் தம் கரத்தின் கோலால் புழுதியை அடிக்க, புழுதியெல்லாம் கொசுக்களாக உயிர்பெற்று எழுந்து மனிதர் மேலும் விலங்குகள் மேலும் மொய்த்துக் கடித்துத் துன்புறுத்தின. எகிப்திய மந்திரவாதிகளால் இது இயலாமல் போகவே அவர்கள் பார்வோனிடம் "இது கடவுளின் கைவன்மையே" என்றனர். (விப.8:16-19)

**3 எகிப்துக்கே தான் அரசனென்னும் இறுமாப்பில் பார்வோன் நெஞ்சை நிமிர்த்திப் பேசினான். அவனை ஒத்த மண்ணுலக அரசர் அல்லவே யாவே கடவுள். அதே எகிப்தரசனின் அரண்மனையில் நாற்பது ஆண்டுகள் இளவரசராக இருந்து வளர்ந்து வாழ்ந்தவர்தாம் மோசே. அவனையும் யாவே கடவுள் யாரென்பதையும் அறிந்தவர்தாம் மோசே.**

இப்படியாய்ப் பார்வோனோ எகிப்திலுள தன்பலத்தை
எண்ணியவன் பார்த்திட்டான் 'இனிமோசே வந்திட்டால்
ஒப்புதலும் தருதற்கே எப்போதும் இசையானாய்
உலகுபுகழ் எகிப்திற்கே இழிவுவரும் எனக்கவன்றான்;
கப்பலுக்கு நங்கூரம் காப்பதற்கு இருக்கையிலே
கடலென்ன? காற்றென்ன? கார்மேகம் தான்என்ன?
துப்புகின்ற தம்பலமாய் வெம்பலத்தால் வெல்வனெனத்
துணிந்தெழுந்தே முழங்கியவன் சுடுநெருப்பில் வாய்வைத்தான்!

(வெம்பலத்தால் - சூடுபறக்கும் கடுமையான வல்லன்மையால்; சுடுநெடுப்பில் வாய்வைத்தான்-சுடுகின்ற நெருப்பையே உண்ணும் துணிச்சலில் தன் வாயை அதில் வைக்கும் மதிகேடன் ஆனான்.)

**4 (விப 8:10) "எங்கள் கடவுளாகிய ஆண்டவருக்கு நிகர் யாரும் இல்லை எனநீர் அறிந்துகொள்வதற்காக உம் சொற்படியே ஆகும்" என்று மோசே கூறியதை மீண்டும் எண்ணிப் பார்த்த பார்வோன் இடறலுறுகின்றான். மோசேயையும் ஆரோனையும் பார்ப்பதால் தன் மனம் அவர்களுக்கு இணங்குமோ என்று பேதலித்தான்.**

'இசரேலர் கடவுளிங்கே என்னாட்டில் நடமாட
இனிநானும் விடமாட்டேன் எதிர்த்தெழுந்தே விரட்டிடுவேன்;
நிசமென்றே அவர்கடவுள் நின்றென்முன் பேசுவதை
நினைத்தின்று பார்க்கையிலே நிம்மதியோ எனக்கில்லை!
வசப்பட்டு அவர்கடவுள், வந்திருந்து அடிமைகளாய்
வாழ்கின்ற எபிரேயர் வதைத்தொடுக்கி வைத்திடுவேன்
பசப்பிங்கே பேசுதற்குப் பதுங்கிவரும் மோசேயும்
பக்கம்நின் றுதவுகின்ற ஆரோனும் நான்பாரேன்.'

(வசப்பட்டு அவர் கடவுள்-மோசேயும் ஆரோனும் அவர்கள் கடவுளாகிய யாவே வசமாகி; பசப்பிங்கே-அவ்விருவரும் என்னிடம் வந்து என் அனுதாபத்தைப் பெறும் நோக்கில் பேசுவதை)

**5 பார்வோன் மனநிம்மதி இல்லாதவனாய், தனக்கு அடிமைக் குடிகளாய் இருக்கும் எபிரேயர்களை மோசேயின் ஆண்டவர் ஆணைக்கு இணங்கி வழிபாடு செய்யப் போக அனுமதி தர விரும்பாதவனாய், தன் நாட்டுத் தெய்வங்களையும், அவர்களுக்கு நாளும் வழிபாடு செய்யும் ஆசாரியர்களையும் எண்ணித் தனக்கிருக்கும் தெய்வங்களின் துணையைப் பெரிதாக மதிக்கின்றான்.**

'என்தூக்கம் நான் இழந்தேன்இரவுபகல் நினைக்கையிலே
என்னுடைய அடிமைகளை நானெதற்கு விடவேண்டும்!
மன்னும்என் முன்னோர்கள் மதித்துவழி பட்டுவந்த
மாவலிமை கொண்டிருக்கும் தேவர்தாம் எண்ணிலரே
நன்றிங்கே அவர்க்கென்றே ஆயிரமாய்த் திருக்கோயில்
நாளுந்தான் பூசனைகள் அவர்க்காற்றும் அர்ச்சகர்கள்
நின்றென்றும் ஆசார நெறிகாத்து வாழ்கின்றார்
நினைத்தவரைப் பார்க்கையிலே அவர்க்கிணையா மோசேயும்?'

(மன்னும்-நிலைபெற்றுஇருக்கும்; பூசனைகள்-பற்பல வழிபாடுகள்; அர்ச்சகர்கள்-பூசை செய்பவர்கள்)

**6 யாவே கடவுளின் வாதைகளால் வந்துறும் அச்ச உணர்வின் அழுத்தத்தால், பார்வோன் தனக்குள்ள பாதுகாப்புகளையெல்லாம் எண்ணிப் பார்த்துத் தனக்குத்தானே ஆறுதல் காணும் உளப்பாங்கினனாய்த் தோன்றுகின்றான்.**

அரண்மனையில் எனைச்சூழ்ந்து அன்புமொழி தான்பொழிந்து
அகலாது எனைப்பேணும் பாவையரோ பற்பலரே;
அரம்பையரை விஞ்சுமிகு கவின்மிளிரும் தளிர்மேனி
அரசியரோ எனைப் பிரியார், அவர்எனக்கே யானைபலம்!
வரம்அருளி எனைப்போற்றி வழிவழியாய் வருகின்ற
வைதீக முனிவரர்கள் அணிகளுமே எனக்குளரே!
சிரம்மழித்துப் புறத்தூய்மை தினம்என்றும் குறையாமல்
செய்துவழி பாடுகளை நிகழ்த்திடுவோர்க் கேதுகுறை?'

(பாவையரோ-பணிபுரியும் பெண்களோ; அரம்பையரை-தெய்வப் பெண்களை; வைதீக முனிவரர்கள் - சமயநெறிகளை நன்குணர்ந்து தவவாழ்வு வாழ்ந்துவரும் முனிவர்களின் கூட்டம், சிரம்மழித்து - தலையை மொட்டையடித்து.)

---

46 **இளம் உள்ளங்களுக்கு**

# சர்க்கஸ்

– B.மேரி ராபர்ட் சாந்திதாஸ், புதுவை.



**சர்க்கஸ்:** சர்க்கஸ் என்றாலே பெரியவர்கள் முதல் சிறியோர்வரை அனைவரையும் கவர்ந்து மகிழ்விக்கும் ஒரு பொழுதுபோக்கு. அதில் விலங்குகளை வைத்து காட்டும் வித்தையை அனைவருமே பெரிதும் ரசிப்பார்கள். அதிலும் கொடிய காட்டு விலங்குகளை கட்டுப்படுத்தி பழக்கி வித்தைகள் காட்டும்போது அனைவரையும் மெய்சிலிர்க்க வைக்கும். பல வருடங்களுக்கு முன் ஒரு பிரபல சர்க்கஸ் கம்பெனி கூடாரமடித்து பகல் இரவு காட்சிகளை நடத்தி வந்தது.

**மெய்சிலிர்க்க வைத்த இரவு காட்சி:** அன்றைய தினம் ஞாயிறு விடுமுறை என்பதால் ஏராளமானோர் அந்த இரவு காட்சிக்கு வந்திருந்தனர். வரிசைப்படி பல்வேறு காட்சிகள் நடந்தேறின. மக்கள் பெரிதும் மகிழ்ந்திருந்தார்கள். கடைசியில் எல்லோரும் பேரார்வத்துடன் எதிர்பார்த்த கொடிய மிருகங்களை பழக்கி வித்தை காட்டும் காட்சி தயாரானது. உள் அரங்கத்தைச் சுற்றி பாதுகாப்பு கம்பி வளையம் அமைக்கப்பட்டது. அதன் பின்னர் வளையத்தினுள் கூண்டில் அடைத்து வரப்பட்ட ஏழு புலிகள் ஒன்றன்பின் ஒன்றாக விடப்பட்டன. அவை உறுமிக்கொண்டு உள்ளே வந்தன. அந்த கூண்டிற்குள் ரிங் மாஸ்டர் மட்டுமே சாட்டையுடன் நின்றார். அவர் அருகில் ஒருவர் உட்காரக்கூடிய ஒரு சிறு இரும்பு நாற்காலி மட்டும் இருந்தது. எல்லா புலிகளும் உள்ளே வந்ததும் அந்த கூண்டின் வாயில் அடைக்கப்பட்டது.

**நடந்தது என்ன?:** காட்சி தொடங்கியது. ரிங் மாஸ்டர் சாட்டையை சொடுக்கி அந்த புலிகளை உற்று பார்த்து உத்தரவு பிறப்பிக்க, அவையும் பயந்துபணிந்து வித்தை காட்டின. சுற்றி அமர்ந்திருந்த மக்கள் பெரிதும் ரசித்து மகிழ்ந்தார்கள். அச்சமயம் யாரும் எதிர் பாராமல் மின்சாரம் நின்றுவிட்டது. இரவு நேரமாகையால் எங்கும் ஒரே கும்மிருட்டு. கூண்டிற்குள் தனி ஆளாக நிராதரவாக, நிராயுதபாணியாக அந்த ரிங் மாஸ்டர் இருந்தார். முப்பது நொடிகளில் மீண்டும் மின்சாரம் வந்தது. விளக்குகள் பிரகாசமாக எரிந்தன. எல்லோரும் பயம் கலந்த ஆச்சரியத்துடன் அகல விரிந்த கண்களுடன் கூண்டினுள்ளே ஊடுருவ உற்று நோக்கினார்கள். ஆனால் அங்கே, எதுவுமே நடவாததுபோல அந்த ரிங் மாஸ்டர் எவ்வித பதற்றமும் இல்லாமல் இயல்பாக புலிகளை உற்றுநோக்கி உத்தரவு பிறப்பித்து சாகச காட்சிகளை நடத்தி முடித்தார். நிகழ்ச்சிகள் முடிந்ததும் மீண்டும் தனி கூண்டுகள் மூலமாக புலிகள் அப்புறப்படுத்தப்பட்டன. பாதுகாப்பு கூண்டும் பிரிக்கப்பட்டது.

**ரிங் மாஸ்டர் சொன்ன விளக்கம்:** பத்திரிகை நிருபர்கள் ரிங் மாஸ்டரை அணுகி தங்கள் சந்தேகங்களுக்கு விளக்கம் கேட்டார்கள்: "விளக்குகள் அணைந்ததும் அந்த கும்மிருட்டிலும் நன்றாக பார்க்கக் கூடிய புலிகள் உங்களை தாக்கக்கூடும் என்ற பயம் உங்களுக்கு இல்லையா?" அமைதியாக பதில் அளித்தார் ரிங் மாஸ்டர்: "இருட்டில் நமக்கு கண் தெரியாது. ஆனால் புலிகளுக்கு நன்றாக கண் தெரியும், ஆனாலும் நமக்கு கண் தெரியாது என்பது அவைகளுக்கு தெரியாது. ஆகவே, இருட்டில் தெரிந்த நெருப்புப் புள்ளிகள் போன்ற அவற்றின் கண்களை உற்றுப் பார்த்து உத்தரவு பிறப்பித்ததால் அவை எந்த தீங்கும் செய்யவில்லை" என்றார்.

**புலிக் கூண்டு:** இந்த உலகமும் ஆபத்துகள் நிறைந்த ஒரு சர்க்கஸ் புலிக்கூண்டு போன்றதே. இதில் நோய், குடும்ப சிக்கல், வேலை இல்லாமை, பொருளாதார நெருக்கடி, உடைந்த உறவுகள், விரோதிகள் என்று பலவித புலிகள் உள்ளன. நம் வாழ்வில் சோதனை இருள் கல்வும் போது நம்பிக்கை ஒளிக் கண்களுடன் அந்த புலிகளை ஆட்டிப் படைக்கலாம். நம் கண்களுக்கு புலப்படாத கடவுள் நம்மை பார்க்கிறார். நம்மோடு இருக்கிறார். சோதனை வேளைகளில் நம்பிக்கையுடன் மன்றாடும்போது நம்முடன் இருந்து நம் துன்பங்களை உற்று நோக்கி உருகலையச் செய்துவிடுவார்.

**திருப்பாடல் 23:4:** தாவீதின் புகழுரை: "மேலும், சாவின் இருள் சூழ் பள்ளத்தாக்கில் நான் நடக்க நேர்ந்தாலும், நீர் என்னோடு இருப்பதால் எத்தீங்கிற்கும் அஞ்சிடேன்; உம் கோலும் நெடுங்கழியும் என்னைத் தேற்றும்.●

## சிலுவைப் பாதை



சிந்தனைச் செல்வர், பேராசிரியர்
அ.குழந்தைராஜ்-காரைக்குடி

சென்ற இதழ் தொடர்ச்சி..

**பத்தாம் நிலை:** மனித சுபாவத்தில் அச்சம், பீதி, விரக்தி அடைந்த இயேசு இரத்த வேர்வை சிந்திய நிலை. இறைவனின் திட்டத்தை அறிந்து அவைகளைத் தமதாக்கி அவைகள் நிறைவேற தம்மைத்தாமே தயாரித்த நிலை. தம்மைக் குறித்து எழுதப்பட்ட வைகள் அனைத்தையும் ஒரு புள்ளி கூட மாறாமல் வாழ்ந்து காட்டியவர். சமூக மாற்றம், பாவ மன்னிப்பு, சமய வழிபாட்டுக் குறைகள், எளியோரை, இனம் காணுதல் என்ற பல துறைகளில் முத்திரை பதித்தவர். தன்னுடைய பணிக்காலம் முடிந்து தந்தையோடு ஒன்றிக்கப்படுவதற்கு முன்பாக, தாம் பட இருக்கும் பாடுகளை நினைத்து, கெத்சமனி தோட்டத்தில் மனம் உடைந்து இரத்த வேர்வை வியர்த்தது இயேசுவின் பத்தாம் நிலை.

**பதினொன்றாம் நிலை:** ஏழைகளை நேசித்து பணக்காரர் களின் எதிர்ப்பை சமாளித்த நிலை. இயேசுவின் உவமை களில் வரும் கதாபாத்திரங்களில் பெயரிடப்பட்ட பாத்திரம் ஏழை லாசர். பணக்காரனின் பெயரை இயேசு கூறவில்லை. பணக்காரன் செந்நிற ஆடையணிந்து தினந்தோறும் விருந்துண்டான். ஏழை லாசர் புண்களில் இரத்தம் வடிய பசியால் வாடினான். மோட்சத்தில் நடந்த உரையாடல்கள் நாமறிந்தவை. ஏழை கைம்பெண் இரண்டு செப்புக்காசு போட்டாள். அதை அவர் அடையாளம் காட்டுகிறார். நயீன் பட்டணத்து விதவை மகன்மீது பரிவு கொண்டு உயிர்ப்பித்தார். மார்த்தா, மரியாவின் சகோதரர் லாசர் மீது மிகுந்த அன்பு கொண்டிருந்தார். லாசரை ஒவ்வொரு இடத்திற்கும் அழைத்துச் செல்கிறார். ஏழைகளை நேசிக்கும் இயேசுவின் பதினோராம் நிலை.

**பனிரெண்டாம் நிலை:** தான் பிறப்பதற்கு முன்பே பிறந்த பிறவிக் குருடனுக்கு பார்வை அளிக்கிறார் இயேசு. பல ஆண்டுகளாக பிறவிக் குருடன் பிச்சையெடுக்கிறான். பரிசேயர் கள் அவனைக் குணப்படுத்த நினைக்க வில்லை. ஆனால் இயேசு இந்தப் பிறவிக் குருடனுக்கு பார்வை கொடுத்து நம் திருஆட்சியாளர்களின் சோம்பல் நிலையைத் தவிர்த்து 'எழுந்து செயல்படு' என்றவாறு சோம்பலுக்கு ஓய்வு கொடுத்த நிலை. இயேசுவின் பனிரெண்டாம் நிலை.

**பதிமூன்றாம் நிலை:** ஓய்வு நாளுக்கு ஓய்வு கொடுத்த நிலை. ஏழாம் நாள் கடவுள் ஓய்ந்திருந்தார். அது சனிக்கிழமை. "ஓய்வுநாளும் மானிட மகனுக்குக் கட்டுப்பட்டதே" என்று கூறி ஓய்வு நாளுக்கு ஓய்வு கொடுத்தவர் இயேசு. ஓய்வு நாளில் புதையுண்டு, வெற்றி வீரராக ஞாயிறு அன்று உயர்த்தப்பட்டார். வாரத்தின் முதல் நாள் ஞாயிற்றுக்கிழமை. உயிர்த்தெழுந்த ஞாயிறுதான் கிறிஸ்தவர்களுக்கு புது உடன்படிக் கையின் துவக்கநிலை. மூன்றாம் நாள் செவ்வாய்க்கிழமை. அன்றைய தினம் கானாவூரில் திருமணம் நடைபெற்றது. அன்னை மரியா முன் கூட்டியே சென்று விட்டார். திருமண தினத்தன்று இயேசு சென்றார். திராட்சை ரசம் தீர்ந்துபோய், அந்தக் குறையைப் போக்க இயேசு தண்ணீரை திராட்சை ரசமாக மாற்றி யதும் நாமறிந்ததே. ஆனால் கிறிஸ்த வர்கள் செவ்வாய்க்கிழமை திருமணம் நடத்தமாட்டார்கள். ஞாயிறு திருப்பலிக் குப்பின் ஆடம்பரமாக வெடி வெடித்து அலட்டிக் கொள்வார்கள். ஓய்வு நாளுக்கும், மூடப் பழக்கவழக்கங் களுக்கும் முற்றுப்புள்ளி வைத்த இயேசுவின் பதிமூன்றாம் நிலை.

**பதினான்காம் நிலை:** கடவுளால் கைவிட்டதைப் போல உணர்ந்த இயேசு வின் நிலை. மூன்றாண்டு காலத்தில், எந்தச் சமயத் தலைவரும் செய்யாத அற்புதத்தை ஆண்டவர் இயேசு செய்து, உலகத்தை புரட்டிப் போட்டார். ஏனெனில் அவரின் வார்த்தையில் உயிர் இருந்தது. செயலில் அன்பு இருந்தது. இயேசு தாமாக முன் வந்து தன்னைக் கையளிக்கிறார். தந்தையின் அழைப்பை ஏற்றுக்கொண்டார். ஆனால் மானிடப் பிறவியில் அவர் பட்ட பாடுகள் கொஞ்சம் நஞ்சமல்ல. சாவிலும் இறை புகழ் பாடினார். திருப்பாடல் 22 ஐ அவர் இறைபுகழாகச் சொல்கிறார். "ஆண்ட வரே, ஆண்டவரே ஏன் என்னைக் கை நெகிழ்ந்தீர்?' சிலுவையிலும் மீட்புப் பணி. "எல்லாம் முடிந்தது" எனக் கூறி தன் ஆவியை தந்தை இறைவனிடம் ஒப்படைக்கும் பதினான்காம் நிலை.

**பதினைந்தாம் நிலை:** தூய ஆவி யானவரை நமக்குத் துணையாளராக அனுப்பியநிலை. நான் விண்ணகம் சென்று தந்தையிடமிருந்து தூய ஆவி யானவரை அனுப்புவேன். உங்களைத் திக்கற்றவர்களாக விடமாட்டேன். அவர் உங்களோடு என்றென்றும் இருப்பார் என நமக்காக தந்தையிடம் பரிந்து பேசி ஆவியானவரை அனுப்புகிறார். தந்தையின் அன்பு, இயேசுவின் அருள், ஆவியானவரின் நட்புறவு நம்மை காக்கின்றன. இவைகளைத் தியானித்து இன்முகத்துடன் கிறிஸ்தவனாக செயல்படுவோம். ●

---

## விண்ணக வாழ்வின்
## 31-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

தோற்றம்: 01-09-1922



இறப்பு: 04-04-1986

### ஆன்ரியேத் தங்கம்மாள் செல்வராஜூ
Henriette Thangammal Selvaradjou (Née Sandjivy)

**அவர்களின் ஆன்மாவிற்கு நித்திய இளைப் பாற்றியையும், முடிவில்லா விண்ணக வாழ்வையும் அளித்தருளும்.** *-கர்.மங்.திரி.*

**இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக 4-4-2017 செவ்வாய்க்கிழமை காலை 6.15 மணிக்கு, புதுவை ஜென்மராக்கினி மாதா பேராலயத்தில் பாடல் திருப்பலி நிறை வேற்றப்படும். திருப்பலியில் பங்கு கொண்டு வேண்டிக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.**

**பிரிவால் மீளா துயருறும்
மகன்கள், மகள்கள், மருமகள்,
பேரப்பிள்ளைகள்,
கொள்ளுப்பேரப்பிள்ளைகள்,
மற்றும் குடும்பத்தினர்.**

---

## விண்ணக வாழ்வின்
## 30-ஆம் நாள் நினைவு அஞ்சலி

தோற்றம்: 30-04-1950
நெல்லித்தோப்பு



இறப்பு : 08-03-2017
சென்னை

### DEROCK MAXIME SOUCÉRADJOU

**"என் வாழ்வில் என்னோடு இருந்தவர் களே என் பிரிவில் எனக்காக செபியுங்கள்."**

**இவரது ஆன்ம இளைப்பாற்றிக் காக 6-4-2017 வியாழக்கிழமை காலை 6.15 மணிக்கு, புதுவை ஜென்மராக்கினி மாதா பேராலயத் தில் பாடல் திருப்பலி நிறைவேற்றப் படும். திருப்பலியில் பங்குகொண்டு வேண்டிக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.**

**பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.**

புதுவை.



# விண்ணக வாழ்வின் ஜுபிலி நினைவஞ்சலி

- 05-05-1908- வேட்டவலத்தில் திரு. தேவசகாயம், திருமதி. அந்தோணியம்மாள் இவர்களுக்கு மூத்த மகனாக பிறந்தார்.
- 21-12-1942-ல் குருவாக சேலத்தில் திருநிலைப்படுத்தப்பட்டார்.
- 25 ஆண்டுகள் தனது குருத்துவ பணியை திண்டிவனம், புதுவை, கள்ளக்குறிச்சி, குருசுகுப்பம், வில்லியனூர் ஆகிய இடங்களில் சிறப்பாக பணியாற்றினார்.
- 6-4-1967-ல் தனது 59-ஆம் வயதில் இறைவனடி சேர்ந்தார். தந்தை அவர்கள் இம்மண்ணில் மறைந்து 50 ஆண்டுகள் கடந்துவிட்டாலும், குன்றின்மேலிட்ட தீபமாய் எம் வாழ்வுக்கு வழிகாட்டி, எம்மவர் நெஞ்சங்களில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார.
- மேலும் 6-4-2017 அன்று புதுவை ஜென்மராக்கினி மாதா ஆலயத்திலும், பிறந்த மண்ணாகிய வேட்டவலத்திலும் மற்றும் அவர் பணியாற்றிய இடங்களிலும் திருப்பலி நிறைவேற்றப்படும். அன் னாரை நினைவுக் கூர்ந்து செபிக்க அன்புடன் அழைக்கின்றோம்.

தந்தை அவர்களின் விண்ணக பிறப்பின் 50-வது ஆண்டை சிறப்பிக்கும் வகையில், ஒரு சிறிய புத்தகம் வெளியிட உள்ளோம். எனவே அன்னாரைப் பற்றி அறிந்தவர்கள், தெரிந்தவர்கள், அவரின் அனுபவம் பெற்றவர்கள் அனைவரையும் அவரைப்பற்றிய தகவல்களை கீழ்கண்ட முகவரிக்கு எழுதியனுப்பும்படி அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

**அருட்திரு. D.பெரியநாயகம்**

**தோற்றம் : 05-05-1908 வேட்டவலம்**
**குருப்பட்டம் : 21-12-1942 சேலம்.**
**மறைவு : 06-04-1967 புதுவை.**

M.Mary Flora Tr.
40/8F Joseph Bhavan
Tirukoilur Road
Vettavalam - 606 754
T.V.Malai - DT.

Rev.Sr. Louisa
St.Louis de Gonzaga Convent
st.Ange Street - 6
Puducherry - 605 001.



# விண்ணக வாழ்வின் ஏழாம் ஆண்டு நினைவு அஞ்சலி

**"நித்திய இளைப்பாற்றியை அவர்களுக்கு அளித்தருளும் ஆண்டவரே, முடிவில்லாத ஒளி அவர்கள்மேல் ஒளிர்வதாக"**

**இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக 06-04-2017 வியாழக்கிழமை காலை 6.15 மணிக்கு புதுவை நெல்லித்தோப்பு, புனித விண்ணேற்பு அன்னை ஆலயத்திலும், காலை 6.15 மணிக்கு புதுவை வினோபா நகர், புனித சூசையப்பர் ஆலயத்திலும், மரித்தோர் பாடல் திருப்பலி நிறைவேற்றப்படும். அனைவரும் அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக செபிக்க வேண்டுகிறோம்.**

*நினைவில் வாழும்*
**மனைவி, மகள், மகன்கள், மருமகன், மருமகள்கள், பேரப்பிள்ளைகள் மற்றும் உறவினர்கள்.**
ஞானப்பிரகாசம் நகர், புதுச்சேரி - 8

திரு. **S. குழந்தைசாமி** HM.Rtd.
St.Ann's Middle School, Tindivanam.
**தோற்றம்: 16-12-1936**
**மறைவு: 06-04-2010**

## 46-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

பிறப்பு: 26-11-1915



இறப்பு: 16-6-1971

Mr. DEROCK Joseph Louis André

S/o. DEROCK Mariassoucé

## 13-ஆம் வருட நினைவு அஞ்சலி

பிறப்பு: 20-6-1928



இறப்பு: 04-04-2004

Mrs. DEROCK MARY THERESA

W/o. DEROCK Joseph Louis André

## செபம்

இறைவா, எங்கள் குடும்பத்தின் தூண்களாய் திகழ்ந்து, அன்பின் வடிவாய் எங்களை பேணிக்காக்க பல தியாகங்களை செய்து, வாழ்க்கையின் முன்னேற்ற படிகளில் எங்களை ஏற்றிவிட்டு, உமது முடிவில்லா ஆட்சியில் சமாதானத்தில் இளைப்பாற, உம்முடைய வான்வீட்டிற்கு உம்மால் அழைத்துக் கொள்ளப்பட்ட எங்கள் பெற்றோர்கள் திரு. **DEROCK Joseph Louis André** திருமதி. **DEROCK Mary Thérèsa** அவர்களிருவரின் ஆன்மாவுக்கு நித்திய இளைப்பாற்றியை அளிக்க மன்றாடுகிறோம், ஆமென்.

**CHERS PARENTS - NOUS VOUS AIMONS TRES FORTS-LES ENFANTS**

4-4-2017 செவ்வாய்கிழமை காலை 6.15 மணிக்கு, புதுச்சேரி புனித ஜென்ம ராக்கினி மாதா பேராலயத்திலும், காலை 6 மணிக்கு நெல்லித்தோப்பு, விண்ணேற்பு அன்னை ஆலயத்திலும், காலை 5.30 மணிக்கு திரு இருதய ஆண்டவர் ஆலயத்திலும், காலை 6.30 மணிக்கு, ரெட்டியார்பாளையம் புனித அந்திரேயா ஆலயத்திலும், நிறைவேற்றப்படும் திருப்பலிகளில் கலந்துகொண்டு, அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக வேண்டிக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

பிரிவால் துயருறும்

**மகன்கள், மகள்கள், மருமகன்கள், மருமகள்கள்,**
**பேரப்பிள்ளைகள், கொள்ளுப்பேரப்பிள்ளைகள்,**
**மற்றும் குடும்பத்தினர்.**

20, III Cross, Ratna Nagar, Puducherry - 9. Phone: 220 20 97

# விண்ணக வாழ்வின் முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி







**மண்ணில்**
**11-05-1967**

**விண்ணில்**
**02-04-2016**

## திரு. O. ஜெரால்டு ஆரோக்கியராஜ் ரோக்

**(Lecturer, Higher Sec. School, Nedungadu.)**

*உயிர்ப்பும் உயிரும் நானே, என்னில் விசுவாசம் கொள்பவர் இறப்பினும் வாழ்வார் - யோவான்.11:25*

**செபம்**

நித்திய ஒளியின் தூய்மையாகிய இயேசுவே! ஆத்துமங்களை நேசிப்பவரே இப்பூலோகத்தை விட்டு உம்மால் தேர்ந்து கொள்ளப்பட்ட

## திரு. O. ஜெரால்டு ஆரோக்கியராஜ் ரோக்

அவர்களின் ஆத்துமாவிற்கு நித்திய இளைப்பாற்றியையும் முடிவில்லா பேரின்ப ஒளியையும் அருளுமாறு உம்மை வேண்டுகிறோம். - ஆமென்.

- ஒரு கர்.மங்.திரி.

பிரிவால் துயருறும்

**மனைவி, மகள்கள், சகோதரி, தாய், தந்தை**
**மற்றும் உறவினர்கள்.**
**கோட்டுச்சேரி.**

**நினைவு திருப்பலி:** 2-4-2017 ஞாயிறு காலை 7.00 மணிக்கு, கோட்டுச்சேரி, தூய சகாய அன்னை ஆலயத்தில், இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக மரித்தோர் திருப்பலி நிறைவேற்றப்படும்.

**நித்திய இளைப்பாற்றியை இவருக்கு அளித்தருளும் ஆண்டவரே!**

## "அன்பின் மகிழ்ச்சியை (The Joy of Love) நமது குடும்பங்களில் வளர்த்தெடுப்போம்!"

29-வது இலத்தீன் வழிபாட்டு முறை இந்திய கத்தோலிக்க ஆயர் பேரவையின் (CCBI) இந்தியத் திருச்சபைக்கான செய்தி! (2017)

சென்ற இதழ் தொடர்ச்சி..

2015 உலக ஆயர்கள் மாமன்றத்தில் பங்கு கொண்ட ஒரு தம்பதியர்; மூளை வளர்ச்சி குன்றிய குழந்தையின் தந்தை; வாழ்க்கைத் துணையை இழந்த ஒற்றைத் தம்பதியர் தங்களின் திருமண வாழ்க்கைப் பயணத்தின் மேடு பள்ளங்களை எந்த ஒளிவு மறைவுமின்றி வெளிப்படையாகப் பகிர்ந்து கொண்டனர். அவர்களின் கடவுள் மீதான ஆழமான விசுவாசம், இறை வார்த்தை மற்றும் நற்கருணைத் திருப்பலிக் கொண்டாட்டங்களில் பங்கெடுப்பதன் மூலம் ஊட்டம் பெற்ற செப வாழ்வு, பொதுநிலையினராக திருச்சபைப் பணிகளில் தங்களை அர்ப்பணித்துக் கொள்ளும் அவர்களின் தியாகம் ஆயர்களுக்கு எடுத்துக்காட்டாக அமைந்தது.

எங்களுடன் குடும்பம் பற்றிய கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டவர்கள், தங்களுடைய பிரச்சினைகளுக்கு மத்தியில் திருச்சபையின் திருமணம் குறித்த போதனைக்குப் பிரமாணிக்கமாக இருந்து கிறிஸ்தவ விசுவாசத்தில் குழந்தைகளை வளர்த்து வருவது இலட்சக்கணக்கான தம்பதியர்களில் ஒரு சிலர்தான் என்பதையும் ஆயர்கள் உணர்கின்றனர். இப்படிப்பட்டக் குடும்பங்களே குருத்துவம் மற்றும் துறவறத்துக்கான தேவ அழைத்தலை உருவாக்கி உதவுகின்றன. மகிழ்ச்சி நிறை மனத்துடன் சமூகத்துக்கும், திருச்சபைக்கும் நமது குடும்பங்கள் ஆற்றி வரும் பணிகளுக்கு எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அதே வேளையில், இந்தியாவில் 300 மில்லியன் மக்கள் ஏழ்மை, இல்லாமை போன்ற வறுமையில் வாடுகின்றனர், குறிப்பாக கிராமப் புறங்களில் மருத்துவ-சுகாதார உதவியும், கல்வி வாய்ப்புகளும், வேலை வாய்ப்புகளும் இன்றி வாடுகின்றனர். இந்த ஏழ்மை தாண்டவமாடும் குடும்பங்கள் பலவற்றில் குடும்ப வன்முறையும் குடிப்பழக்கமும் பெரும் தீமைகளாக உள்ளன. ஏழைகளில் பெரும்பாலும் பெண்கள், குழந்தைகள் பெரும் அவதிப்படுகின்றனர். பெரும்பாலான கத்தோலிக்க குடும்பங்களுக்கு முறையான மறைக்கல்வி சென்றடையவில்லை! குடிபெயர்தலும் குடும்பங்களையும் பெரிதும் பாதித்துள்ளது. ஊடகங்கள் பலவிதங்களில் பயனுள்ளதாக இருந்தபோதிலும், குடும்பச் சீரழிவுக்குப் பெரும் காரணமாக இருந்து வருகின்றன.

இப்பிரச்சினையின் ஒரு பகுதி இன்றைய குருக்கள் துறவிகள் குடும்பங்களில் தம்பதியர்கள் சந்திக்கும் பிரச்சினைகளைக் கையாளத் தகுந்த பயிற்சியற்று உள்ளனர் (அன்பின் மகிழ்ச்சி, எண்: 202). குடும்பங்களுக்கான பாதுகாப்பு மேய்ப்புப் பணியில் குருக்கள், குடும்ப இயக்கங்கள், சங்கங்களை வழிநடத்திக் கையாளக் கற்றிருக்க வேண்டும். நமது விசுவாசிகளுக்குப் பொறுப்பானவர்கள் என்ற முறையில், குருக்கள் நமது நாட்டின் பல்வேறு பகுதிகளில் வாழும் குடும்பங்கள் சந்திக்கும் பிரச்சினைகள், திருமணங்களில் உள்ள பிரச்சினைகளைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

குடும்ப அப்போஸ்தலிக்கப் பணிக்கான முன் எமைப் பொறுப்பாளர்கள் என்ற முறையில் ஆயர்களாகிய நாங்கள் கீழ்க்காணும் குடும்பங்களுக்கான செயல்பாட்டுத் திட்டத்தைத் (Plan of action) தீட்டியுள்ளோம், தேவைக்கேற்ப ஒவ்வொரு மறைமாவட்டமும் இதைப் பயன்படுத்திக் கொள்ளலாம்:

தொடரும்...



✦ **வாழ்த்துகிறோம்:** சர்வதேச "கடற்கரை கபடிப்போட்டி"யில் தங்கம் வென்ற அந்தோணியம்மாள்: புதுவை-கடலூர் உயர் மறைமாவட்டம் மேமாளூர் பங்கு சோழ பாண்டியபுரத்தைச் (விழுப்புரம் மாவட்டம்) சேர்ந்த திரு. சவரிமுத்து அவர்களின் மகள் செல்வி. S. **அந்தோணியம்மாள்.** தென்னாப்பிரிக்கா, மொரிஷியஸ் தீவில் மார்ச் 18, 19 ஆம் தேதிகளில் முதலாவது சர்வதேச கடற்கரை கபடி போட்டி நடைபெற்றது. இதில், இந்தியா, ஓமன், இலங்கை, கென்யா, மொரிசியஸ், இங்கிலாந்து உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்த அணிகள் பங்கேற்றனர். இந்திய மகளிர் கபடி அணியில் மாணவி அந்தோணியம்மாள் உள்ளிட்ட ஆறு வீராங்கனைகள் பங்கேற்றனர். இறுதிப் போட்டியில் இந்திய மகளிர் அணி, இங்கிலாந்து அணியை 56-25 என்ற புள்ளிக் கணக்கில் வீழ்த்தி தங்க பதக்கத்தை வென்றது. தங்கப் பதக்கம் வென்ற அந்தோணியம்மாள் 22-3-2017 புதன் அன்று இந்தியா திரும்பினார். விழுப்புரம் வந்த அவருக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. மதுரை யாதவா கல்லூரியில் முதுகலை இரண்டாம் ஆண்டு பயிலும் அவர், உலகக் கோப்பை வெல்வதே அடுத்த இலக்கு என்று பெருமிதத்துடன் தெரிவித்துள்ளார். முன்னதாக வியட்நாம் டாநாங் நகரில் 2016ஆம் ஆண்டு இடம்பெற்ற ஐந்தாம் ஆசிய கடற்கரை விளையாட்டு போட்டிகளில், கபடி போட்டிகளில் பங்கேற்று தங்கப் பதக்கம் பெற்றுள்ளார். இருமுறை தங்கப் பதக்கம் பெற்று தமிழகத்துக்கும், இந்தியாவுக்கும், தம் பெற்றோருக்கும், தாம் பயிலும் கல்லூரிக்கும் புகழ் சேர்த்த அந்தோணியம்மாளை வாழ்த்துகிறோம், பாராட்டுகிறோம் .- (தினமணி.ஊடகங்கள்).



✦ **எழுத்தாளர் அசோகமித்திரன் காலமானார்:** பிரபல தமிழ் எழுத்தாளர் அசோகமித்திரன் (85) சென்னை வேளச்சேரியில் வியாழக்கிழமை (மார்ச்.23) இரவு காலமானார். ஐதியாகராஜன் என்ற இயற்பெயர் கொண்ட எழுத்தாளர் அசோகமித்திரன் ஆந்திர மாநிலம் செகந்திராபாத்தில் 1931ல் பிறந்தார். தந்தையின் மறைவுக்குப்பின், 1952-இல் சென்னைக்கு குடியேறி, ஜெமினி ஸ்டுடியோவில் மக்கள் தொடர்பு துறையில் பணியாற்றி, பின் 1956 முதல் எழுதத் தொடங்கி தம் இறப்புவரை 61 ஆண்டுகள் பல நூல்கள் படைத்துள்ளார். கரைந்த நிழல்கள், தண்ணீர், 18-ஆவது அட்சக்கோடு, ஒற்றன், மானசரோவர் ஆகிய புகழ்வாய்ந்த நாவல்களும், 250 க்கும் மேற்பட்ட சிறுகதைகளும், நூற்றுக்கணக்கான கட்டுரைகளும் அவர் தந்துள்ளார். கணையாழி மாத இதழின் ஆசிரியராக 25 ஆண்டுகள் பணிபுரிந்தார். ஆங்கிலத்திலும் பல கட்டுரைகள் படைத்துள்ளார். சாகித்ய அகாதெமி விருது, திருவிக விருது, டால்மியா மத நல்லிணக்க விருது உட்பட பல விருதுகள் பெற்றுள்ளார். 'அப்பாவின் சிநேகிதர்' நூலுக்காக அவருக்கு சாகித்ய அகாடமி விருது வழங்கப்பட்டது. (தினமணி, 23.3.2017).

## விண்ணக வாழ்வின் முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி



**C.பெரியநாயகம்மாள்**

**தோற்றம்: 20-04-1922**

**மறைவு: 03-04-2016**

**"உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே, என்னில் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வார்"-யோவான்.11:25**

**எங்களது தாயாரின் ஆன்ம இளைப் பாற்றிக்காக 3.4.2017 திங்கள் காலை 6.00 மணிக்கு கக்கனூர், புனித சிறுமலர் குழந்தை இயேசுவின் தெரேசாள் ஆலயத்தில் மரித்தோர் பாடல் திருப்பலி நிறைவேற்றப்படும். இவரின் ஆன்ம சாந்திக்காக செபிக்கவும்.**

**பிரிவால் துயருறும்**

**மகன்:அருட்திரு.C.பெஞ்சமின் USA.**
**மகன்கள், மகள்கள்,**
**மருமகன்கள், மருமகள்கள்,**
**பேரப்பிள்ளைகள்**
**மற்றும் உறவினர்கள்.**
**கக்கனூர்.**

Printed and Published on behalf of Most Rev. Dr. A. ANANDARAYAR, Archbishop of Pondicherry & Cuddalore, by Rev. Fr. C.ANTONI ROCHE, Manager, MISSION PRESS & Editor, Sarva viabi, 196, Cathedral Street, Pondicherry - 605 001.